Registered as a Newspaper

# உதயன்

கொரோனா
நேற்று 336
மொத்தம் 5,89,935
உயிரிழப்பு
நேற்று 24
மொத்தம் 15,098

சுடர் : 37
கதிர் : 38

திங்கட்கிழமை
03 ஜனவரி 2022

மார்கழி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

# கழுத்தை இறுக்குகிறது டொலர் நெருக்கடி!

## ஜனாதிபதி தலைமையில் இன்று கூடுகின்றது அமைச்சரவை

கொழும்பு, ஜனவரி 3

அந்நியச் செலாவணி கையிருப்பு பிரச்சினையால் எதிர்வரும் வாரங்களில் நாட்டில் நெருக்கடி நிலைமை தோன்றலாம் என வலுவான எச்சரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. 15 ➤

## கொரோனாவால் மன்னாரில் ஒருவர் சாவு!

மன்னார், ஜன.3

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் கொரோனாத் 15 ➤

## 31 நாளான பெண் சிசு உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன.3

31 நாளேயான பெண் சிசு ஒன்று நேற்றுத் திடீரென உயிரிழந்துள்ளது.
கோப்பாய், கோண்டாவில் வீதியைச் சேர்ந்த க.பிரகவி என்ற குழந்தையே உயி 15 ➤

## வேகமெடுக்கும் ஒமிக்ரோன்

கொழும்பு, ஜன.3

இலங்கையில் ஒமிக்ரோன் பரவல் வேகம் அதிகரித்து வருகின்றது என்று சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது. நாட்டில் இதுவரை ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளான 48 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் 15 ➤

## உணவுத் தட்டுப்பாட்டுக்கு கோத்தாபயவே காரணம்!



கொழும்பு, ஜன.3

எமக்குத்தான் அனைத்தும் தெரியும் என்று கூறியே, அனைத்தையும் நாசம் செய்து விட்டார்கள். நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டுப் பிரச்சினை ஏற்பட ஜனாதிபதி கோத்தாபய 08 ➤

## அரிசி, பருப்பு, தேங்காய் வீடு உடைத்து திருட்டு!

பளை, ஜன.3

பளை, இந்திராபுரத்தில் வீடொன்று உடைக்கப்பட்டு அரிசி, தேங்காய், பருப்பு போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கடந்த முதலாம் திகதி நடந்துள்ளது என்று தெரிய 15 ➤

## ரயில் கட்டணத்தை உயர்த்துக!

கொழும்பு, ஜன.3

ரயில் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்று ரயில்வே திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது என்று போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.
ரயில்வே திணைக்களம் தொடர்ந்து 15 ➤

### முச்சந்தி முரளி



"தோசையின்ர விறுத்தத்தில ஆட்டுக்கல்லுக்கொரு அலங்கார மாலை எண்ட கதை மாதிரித்தான் உந்த விருது குடுத்த கதையும் இருக்கு கண்டியளோ...!"



## ஜனாதிபதிக்கு விருது

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு "ஸ்ரீ லங்கா தீஸ்வர பத்ம விபூஷண" விருது, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை ஸ்ரீ கல்யாணி சமகிரிதர்ம மகா சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

## எட்ட நில்லுங்கள் கட்டித் தழுவாதீர்!

கொழும்பு, ஜன.3

புத்தாண்டு பிறந்த பின்னர், இன்றைய தினமே அலுவலகங்கள் திறக்கப்படும் நிலையில், பணிகளுக்குச் செல்வோருக்கு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத் 15 ➤

## விமான எரிபொருளை பயன்படுத்தி சமையல்?

கொழும்பு, ஜன.3

மண்ணெண்ணெய்க்கு மாற்றாக விமான எரிபொருளை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று எரிசக்தி அமைச்சின் செயலா 15 ➤

## தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டியே தீர்வாகும்!

*'13'ஐ வலியுறுத்துவது பொருத்தமற்றது என சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.3

இந்தியப் பிரதமர் ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு சுவட்டு சமஷ்டி முறையே பொருத்தமானது என்று கூறியிருக்கும் நிலையில், 13 ஆவது திருத்தத்தை நடை 15 ➤

## பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக் கட்டணமும் உயர்வு!

கொழும்பு, ஜன.3

பாடசாலை போக்குவரத்துச் சேவைக் கட்டணமும் இன்று முதல் 20 வீதத்தால் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கைப் பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ருவான் பிரசாத் தெரிவித்தார்.
எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்தே இந்த முடிவை எடுக்க நேரிட்டது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது-
கொரோனா வைரஸ் தொற்றால் பாடசாலைகள் மூடப்பட்டன. சுமார் ஒன் 15 ➤

## புதிய அரசு வந்தாலும் 6 மாதங்களில் கவிழும்

### பதுங்குகிறது சுதந்திரக் கட்சி



கொழும்பு, ஜன.3

மாற்று அரசாங்கமொன்றை உருவாக்கினால் தற்போதைய சூழ்நிலையில் அந்த அரசும் 6 மாதங்களுக்குள் கவிழ்ந்துவிடும். எனவே, மாற்று அரசு அல்ல, உறுதியான வேலைத்திட்டமே தற்போது வேண்டும். இவ் 08 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமக்கான அரசியலை தமிழ்மக்கள் தாமே அமைத்துக்கொள்ள வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் புத்தாண்டுச் செய்தி

**கொழும்பு, ஜன. 3**

**தமிழ் மக்கள் தமக்கான அரசியல் அரங்கைத் தாமே வடிவமைத்து, இந்த அரங்கை நோக்கி அனைத்துலகச் சமூகத்தை இழுக்கவேண்டும் என தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன்.**

அவர் தனது புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: கடந்துசென்ற ஆண்டின்போது தமிழீழ தேசியப்பிரச்சினை மேலும் கூர்மையடையாவிடினும் அது அனைத்துலகப்பரிமாணம் கொண்டதோர் பிரச்சினையாக நீடித்து வருகிறது. இதற்குப் புலம்பெயர் தமிழ் மக்களின் பல்வேறு அரசியற்செயற்பாடுகளும் பங்களிப்புச் செய்திருக்கின்றன. தாயகத்திலும் தமிழ் மக்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

2021ஆம் ஆண்டில் தாயகத் தமிழ்த் தலைவர்கள் 13ஆம் திருத்தச்சட்டத்தைச் சுற்றித் தமது அரசியலைச் செய்து கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. தமிழீழத் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக 13ஆம் திருத்தச் சட்டம் அமையாது எனவும், எனினும் நடைமுறையில் இருக்கும் 13ஆம் திருத்தத்தின்கீழ் அமைந்த மாகாணசபைகளை இல்லாதொழிக்கும் முயற்சியை ஸ்ரீலங்கா அரசு எடுக்குமானால் அதனை எதிர்க்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை பல தாயகத் தமிழ் அரசியல் தலைவர்கள் கொண்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது. ஆனால், இவ் அரசியல் கதையாடல் நடைபெறும் முறையானது குறிப்பிட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்த மாகாணசபைகள்தமிழர்தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முடிச்சுப்போடும் முயற்சிக்குத் துணைபோவதாக அமைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. நாடு தழுவியரீதியில் அமைந்த அதிகாரப்பரவலாக்கலின் ஓர் அம்சமாக மாகாணசபைகள் இருப்பது வேறு. ஆனால், தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபைகள் அமையும் என நம்புவதோ அல்லது பேசுவதோ வேறு. தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைவதில் மாகாணசபைகள் ஏற்கனவே தோல்வி கண்டுவிட்டன. மாகாணசபைகளைச் செத்த பிணம் என்று தாயகத் தமிழ்த் தலைவர் ஒருவர் வர்ணித்ததுமுண்டு. மாகாணசபைகளை தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுடன் எவரும் முடிச்சுப் போடுவதைத் தாயகத் தமிழ்த் தலைவர்கள் நிராகரிக்க வேண்டும்-என்றார். (ம)

# சுற்றுலாத்துறை மீள வழமைக்கு

கொழும்பு,ஜன,3

இன்னும் இரண்டு மாதங்களில், சுற்றுலாத்துறை இயல்புக்குத் திரும்பும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் சுமார் ஒரு லட்சத்து 25 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவர் என்று எதிர்பார்க்கின்றோம்.

மத்திய கிழக்கு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைத்து, நாட்டை வழமைக்குத் திருப்ப எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை சுமார் ஒரு லட்சத்து 80 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்தனர். அவர்களில் 86 ஆயிரம் பேர் டிசெம்பர் மாதத்தில் மட்டும் வருகை தந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# ஆபத்தை தரும் இரண்டு வீதிகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

மக்களுக்கு ஆபத்தை தரக்கூடிய இரண்டு வீதிகள் தொடர்பில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதி மற்றும் கள்ளிவீதி ஆகியவற்றின் ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியால் சென்று மாவடிச்சந்திப் பக்கம் திரும்பும்போது, மாவடிச் சந்திப்பக்கம் இருந்து வரும் எந்த வாகனமும் அந்தவழியாக வரும் மக்களுக்குக் கண்ணுக்குத் தெரிய சந்தர்ப்பம் இல்லை. அதுமட்டுமல்ல பிரதானவீதி உயரமாகவும், ஆலய வீதி பதிவாகவும் இருப்பதால் வாகனத்தை உருட்டிக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

அதேவேளை, பிரதான வீதியில் இருந்து கள்ளி வீதிக்கு இறங்கினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அந்தப் பகுதியில் வீதி அகலமாக இல்லை. இருபக்கமும் இரண்டு வர்த்தக நிலையங்கள் இருக்கின்றன. அந்த வர்த்தக நிலையத்துக்கும் வரும் வாகனங்கள் வசதியோடு தங்கி நிற்க இடம் இல்லை. போக்குவரத்துச் செய்வது மிகவும் கஷ்டமானது. இதனையும் பார்வையிட்டு குறைந்தது அந்தப் பாலத்தையாவது நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

# நான் இல்லாத நேரத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த முயற்சி

*பிரதி முதல்வர் மீது மணிவண்ணன் குற்றச்சாட்டு*



யாழ்ப்பாணம், ஜன. 3

சபை அமர்வில் நான் இல்லாத நேரத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களைப் பேசுவதற்கு சிலர் முற்பட்டுள்ளனர். இத்தகையதொரு பின்னணியில்தான் மாநகர சபை உறுப்பினர்களின் போராட்டமும் இடம்பெற்றது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், யாழ் மாநகர சபை முன்பாக அண்மையில் சபை உறுப்பினர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பில் ஊடகவியலாளரொருவர் கேள்வியெழுப்பிய நிலையிலேயே யாழ். மாநகர முதல்வர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொய்கூறி போராட்டங்களை மேற்கொள்வது உண்மையில் கவலைக்குரியது. அண்மையில் நடந்த சபை அமர்வின் போது நான் ஒரு சில மணி நேரம் பங்குபற்றிவிட்டு ஆரியகுளப் புனரமைப்பு நிகழ்வுக்கான அழைப்பிதழ்களை வழங்குவதற்காக வெளியேறிவிட்டேன். அந்த நேரத்தில் பிரதி முதல்வரை சபைக்குத் தலைமை தாங்குமாறு கூறி விட்டுச் சென்றேன்.

நிகழ்ச்சி நிரலின்படி சபையை நடத்துங்கள். நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை மேற்கொள்ளவேண்டாம் என்றே கூறியிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக நான் சென்ற பின்னர் என்னுடைய அனுமதியின்றி நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை கையாண்டார்.

அதனால் நான் சம்பந்தப்படாத விடயங்களில் என்னுடைய கையொப்பத்தை இடமுடியாதென தெரிவித்தேன். இதனை நான் கூறியதால் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால், அதே விடயத்தை நிகழ்ச்சி நிரலில் சேர்த்து, அதன்பின் அது தொடர்பில் பேசுமாறு உறுப்பினர்களை நான் கோரினேன். ஆனால் அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டு சென்றுவிட்டனர் - என்றார். (ம-20)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஜன. 3

இந்த மாதம் முதல் பகுதிக்குள் அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்படி 8ஆம், 12ஆம், 18ஆம் திகதிகளில் ஏதாவது ஒரு திகதியில் அமைச்சரவை மாற்றப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின்றது.

ஆறு அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகள் மற்றும் எட்டு உயர்மட்ட அரச நிறுவனங்களின் தலைமைப் பதவிகள் ஆகியனவே அவ்வாறு மாற்றப்படவுள்ளன. மூத்த அமைச்சர்கள் சிலர் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே இந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. (ம)

# பிரதமர் பதவியை கைவிடமாட்டேன்!

*மஹிந்த ராஜபக்ச விடாப்பிடி*



கொழும்பு, ஜன. 3

பிரதமர் பதவியிலிருந்து விலக விரும்பவில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ச அரசியலிலிருந்து ஓய்வுபெற்று, பிரதமர் பதவியை பஸில் ராஜபக்சவுக்கு வழங்கவுள்ளார் என்று நாட்டில் தகவல் பரவிவருகிறது. இந்தநிலையில், ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள பிரதமர், நாட்டில் காணப்படும் ஜனநாயக சுதந்திரத்தைப் பயன்படுத்திச் சிலர் பல வதந்திகளைப் பரப்பிவருகின்றனர். நாட்டின் புத்திஜீவிகள் இதனை ஏற்றுக்கொள்வதில்லை. ஜனநாயக சுதந்திரத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துவது நியாயமில்லை - என்று தெரிவித்துள்ளார். (த-இ)

# கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கட்டடப் பொருள்கள் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன. 3

தீவகங்களில் கூட்டுறவுத்துறையை முன்னேற்றுவதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கட்டடப்பொருள்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகளிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை முன்னேற்றும் வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகக் கட்டடப் பொருள்களை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், புங்குடுதீவு ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே இவ்வாறு கட்டடப்பொருள்கள் விற்கப்படவுள்ளன. (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் போதனா பணிப்பாளர்

# பொறுப்பைக் கையளிக்காது வெளிநாடு சென்றதால் குழப்பம்

## விதிமீறல் என மருத்துவர் சங்கம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜன. 3**

**வெளிநாடு சென்ற போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், பொறுப்பையும் கொண்டுசென்றுவிட்டார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் யாழ்.போதனா மருத்துவமனைக் கிளை குற்றஞ்சாட்டுகின்றது. இது தொடர்பில் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளதாவது:-**

நிர்வாகம் என்பது எப்பொழுதும் சீரியதாகவும் பொறுப்புத்தன்மை வாய்ந்ததாகவும் அமைவது முக்கியம். ஆனால், பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தியின் நடவடிக்கை எமக்கு அதிருப்தியளிக்கிறது. தனது மேற்படிப்புக்காக பிரிட்டன் செல்வதற்கு முன்னர் அவர், தனது பணிகளை பதில் பணிப்பாளரிடம் ஒப்படைத்துவிட்டு சென்றிருக்கவேண்டும். அல்லது யார் பதில் பணிப்பாளராக கடமையேற்பது என்பது தொடர்பில் சுகாதாரப்பணிப்பாளர் ஊடாக மருத்துவமனைக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

முதல்முறையாக வெளிநாடு சென்றபோது தனது கடமைகளை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜாவிடம் ஒப்படைத்து சென்றிருந்தார். மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜாவும் பணிப்பாளர் பதவியில் மிக திறம்பட பணியாற்றி, கொரோனா தீவிரமாக இருந்த காலப்பகுதியில் மருத்துவமனை நிர்வாகத்தை செவ்வனே வழி நடத்தியிருந்தார்.

ஆனால், இந்த முறை மருத்துவர் சத்தியமூர்த்தி முறையாக எந்தப் பொறுப்பு ஒப்படைப்புமின்றி வெளிநாடு புறப்பட்டுச் சென்றிருக்கிறார். அத்துடன் அங்கிருந்து மருத்துவ நிபுணர்களுக்கு அனுப்பிய மின்னஞ்சலில், தான் வெளிநாடு வந்துவிட்டால்கூட அங்கிருந்து மருத்துவமனை நிர்வாகத்தை மேற்கொள்வேன், விண்ணப்பங்கள் கோரல்கள் என்பவற்றை தன்னைத் தொடர்பு கொண்டு செயற்படுமாறும் கூறியிருக்கின்றார்.

இவரது இந்தச் செயற்பாடானது இலங்கையின் தாபன விதிக் கோட்பாடுகளை மீறுவதாகவும், மருத்துவப் பட்டப்பின் படிப்புக் கல்லூரியின் நியதிகளை மீறுவதாகவும் அமைந்துள்ளது. அத்துடன் வெளி நாட்டிலிருந்து தான் மருத்துவமனையை இயக்கப் போகின்றேன் எனக் கூறியிருப்பது அதிகாரத்தின்மீது இவருக்குள்ள அதீத பேராசையைக் காட்டுவதுடன் சட்ட விதிகளை மீறி தனது அதிகார ஆக்கிரமிப்பை செய்ய விழையும், பிறரை உரிய பணிகளை செய்ய விடாது குழப்பும் ஏகபோக மனநிலையை சுட்டுவதாக அமைகிறது.

இது ஒருபுறமிருக்க, பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தாவின் தலையீடுகளால் மருத்துவமனையின் வழமையான நடவடிக்கைகள் பாதியளவு குழப்பப்பட்டுள்ளன. அவரது குழப்ப நிர்வாகத்தால், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு முற்றாக ஸ்தம்பித்துப் போயுள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (கு)

## தமிழ்ப் பொலிஸ் அலுவலர் நேற்றுச் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

இளவாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸ் அலுவலர் அவரது வீட்டிலிருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலை, கூவில் வீதியிலுள்ள வாடகை வீட் டில் நேற்றுக் காலை அவர் சடலமாக மீட்கப்பட்டார். மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரமணன் (வயது-47) என்ற பொலிஸ் அலுவலரே உயிரிழந்தவர். அவரது குடும்பத்தினர் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு சென்றிருந்த நிலையில் பொலிஸ் அலுவலர், வீட்டில் தனிமையில் இருந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)



## கட்டடப்பொருள் விற்பனை நிலையத்தில் தீ விபத்து

கிளிநொச்சி, ஜன. 3

கிளிநொச்சி, சேவியர் கடைச் சந்திக்கு அருகில் இயங்கி வந்த, கட்டடப் பொருள் விற்பனை நிலையத்தில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் கோடிக் கணக்கான பெறுமதியான பொருள்கள் எரிந்து அழிந்துள்ளன.

மின்சார ஒழுக்குக் காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கரைச்சி பிரதேசசபையின் தீ அணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்தினர். (ஒ-4-214)



## மரக்கறிகளின் விலை உச்சம்

கொழும்பு, ஜன. 3

கம்பஹா மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

அங்கு ஒரு கிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

காய்கறிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக, தமக்கு ஏற்றவாறு தன்னிச்சையாக மரக்கறிகளின் விலையை வியாபாரிகள் நிர்ணயித்துள்ளனர் என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சில விற்பனையாளர்கள் மரக்கறிகளின் விலையைக் காட்சிப்படுத்தாமல் விற்பனை செய்கின்றனர் என்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (ஒ-4-இ)




அகலக்கால் வைச்சால் ஆபத்து. அதுதான் இப்ப வல்வெட்டித்துறை பட்டத்திருவிழாவுக்கும் நடந்திருக்கு. கொஞ்ச வருசத்துக்கு முதல் சின்னதா ஆரம்பிச்ச இந்தப் பட்டத்திருவிழா நாலைஞ்சு வருசமாக எள்ளுப் போட்டால் கீழ விழமுடியாதளவுக்கு சனக்கூட்டத்தோட தான் நடந்தது. பரிசுகள், ஸ்பொன்சர்கள் எண்டு ஒவ்வொருவருசமும் பட்டத்திருவிழாவின்ர பெறுமதி கூடினபடி போய்க்கொண்டிருந்திச்சுது. இந்தப் பட்டத்திருவிழாவால வல்வெட்டித்துறைக்கே ஒரு தனிப் பெருமையும், புகழும் வரத்தொடங்கிட்டுது.

இப்பிடிப்பட்ட நிலையிலதான் இந்தவருசம், பட்டத்திருவிழாவை தன்ர அமைச்சின்ர அனுசரணையோட, 'சர்வதேசப் பட்டத்திருவிழா' எண்ட பேரோட நடத்துவம் எண்டு அமைச்சர் நாமல் வெளிக்கிட்டுக்கிறார். இந்தப் பட்டத்திரு விழாவை நடத்திற சனசமூக நிலையக்காரரை நேரடியாகக் கூப்பிட்டு கதைச்சு, அதைப்பற்றி அறிவிப்பும் செய்திருக்கிறார். அமைச்சர் தானவே வலியவந்து உதவி செய்யிறார், எங்கட பட்டப்போட்டிக்கு ஒரு சர்வதேச அங்கீ காரம் கிடைக்கப் போகுது எண்ட சந்தோசத்தில சனசமூக நிலையக்காரரும் ஓமெண்டு சொல்லிட்டினம். ஆனால் அதுக்குப் பிறகுதான் இப்ப பிரச்சினை வெடிச்சிருக்கு.

"ஒரு இனப்படுகொலையாளியை எப்பிடி எங்கட தலைவர் பிறந்த மண்ணில கூப்பிட்டு பட்டத்திருவிழாவை நடத்த ஏலும்?" எண்டு ஊர்ச்சனமும், வெளிநாட்டில இருக்கிற வல்வெட்டித்துறை ஆக்களும் கேள்வி கேக்கத்தான், சனசமூக நிலையக்காரருக்கு இப்பிடி ஒரு சிக்கல் இருக்கெண்ட உண்மை உறைச்சிருக்கு. அதோட இன்னும் சில பிரச்சினையளும் இருக்கு. இவ்வளவு நாளும் 'வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா' எண்டு ஊர்ப்பேரோட தான் நடக்கும். ஆனால், இனி ஊர்ப்பேர் போடமுடி யாது. அதுதான் சர்வதேசப் பட்டத்திருவிழா எண்டு மாத்தியாச்சே பிறகெப்படி ஊரின்ர பேரைப் போட ஏலும்?

"அதோட இந்தவருசம் அனுசரணை தாறம் எண்டு பட்டப்போட்டிக்குள்ள நுழைஞ்சு, பிறகு அதை அப்பிடியே தங்கட நிகழ்வாக்கி, அரசாங்கம் தான் அதை நடத்தலாம் எண்டு சட்டமும் போட்டு, எங்களுக்கும் அதுக்கும் சம்பந்தமேயில்லாமல் செய்திடுவாங்கள்" எண்டு ஊர்ச்சனம் அரசாங்கத்தில டவுட் படுகுதுகள். அப்பிடி நடக்கிறதுக்கும் சந்தர்ப்பம் கனக்க இருக்குத்தான். அதோட அரசியல் சாயமும் பூசினால் அவ்வளவு தான். வல்வெட்டித்துறைச் சனங்கள் பட்டப் போட்டியை மறக்கவேண்டியதுதான்.

சில விசயங்கள் அப்பிடியே இருக்கிறதுதான் நல்லது. பழஞ்சோத்தை சர்வதேச உணவாக்கிறம் எண்டிட்டு, சோத்துக்குப் பதிலா சோளத்தைப் போட்டு செய்ய ஏலாது தானே? அப்பிடித் தான். பட்டப்போட்டியை, 'வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா' எண்ட பேரோட, அதே தனித்துவத்தோட, அதே ஆன்மாவோட, அரசியல் கலப்பில்லாமல் செய்தாத்தான் ஊருக்கும் மதிப்பு, பட்டப்போட்டிக்கும் சிறப்பு.

என்ன நான் சொல்லுறது சரி தானே?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் பொறுப்பதிகாரிகளை நியமிப்பதில் அரசியல் தலையீடு!

## வடக்கில் பெரமுன கைங்கரியம்

**கொழும்பு, ஜன. 3**

**தகுதியற்ற பொலிஸ் அதிகாரிகளை வடக்கில், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்க அரசியல்வாதிகள் கடிதங்களை அனுப்பி அழுத்தம் கொடுக்கின்றர் என்றும், அதனால், அரசியல்வாதிகளின் விருப்பப்படியே தகுதியற்றவர்கள் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.**

நாடுமுழுவதும் இந்தநிலைமை ஏற்பட்டுள்ளது. அதன்படி, வடக்கில் பொலிஸ் நிலையம் ஒன்றுக்கு பொறுப்பதிகாரி ஒருவரை நியமிக்க குறித்த மாவட்டத்தின் பொதுஜன பெரமுன அமைப்பாளர் என அறியப்படும் அரசியல்வாதி ஒருவர் பரிந்துரைக் கடிதம் வழங்கியுள்ளார். அதில், குறித்த பொலிஸ் அலுவலரின் பெயர் குறிப்பிடப்பட்டு, "அவர் முல்லைத்தீவு பொலிஸ் அதிகார எல்லைப் பிரிவில் தமது கட்சிக்காக கட்சியின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆதரவளித்தவர். எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின்போது அவரது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால்..." எனக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கடிதமானது பொலிஸ் அதிகாரி ஒருவரை பொறுப்பதிகாரியாக நியமிப்பதற்கு பிரதமரிடம் பரிந்துரை முன்வைத்து அனுப்பப்பட்ட கடிதம் என அறியமுடிகிறது

அதனால் தகுதியற்றவர்கள் பொறுப்பதிகாரிகளாக, தகுதியான அதிகாரிகள் சாதாரணகீழ் நிலைப் பதவிகளில் தொடர்ந்திருக்க வேண்டிய நிலைமை பொலிஸ் திணைக்களத்துக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால், பொலிஸ்மா அதிபரும் கடும் அதிருப்தியில் உள்ளார் என்று பொலிஸ் தலைமையகத்தின் நம்பகரமான தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. (த-இ)

*விபத்தில் உயிரிழப்பு:*

# உரிய விசாரணை கோரி ஏ-9 வீதியில் போராட்டம்

வவுனியா, ஜன. 3

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இளைஞனுக்கு நீதிகேட்டு ஏ-9 வீதியை மறித்து போராட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

வவுனியா, ஏ-9 வீதி தாண்டிக்குளத்தில் பிக்கப் ரக வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதியதில் வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ரஜீபன் (வயது -32) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்த முச்சக்கரவண்டி சாரதியின் உறவினர்கள், நண்பர்கள் இணைந்து நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

விபத்துக்குள்ளாகிய வாகனத்தை ஏற்ற விபாது வாகனத்தை முற்றுகையிட்டும், ஏ-9 வீதியை மறித்தும் போராட்டம் தொடர்ந்ததால், ஏ-9 வீதியூடான போக்குவரத்து சுமார் ஒரு மணிநேரம் பாதிக்கப்பட்டது.

பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல்போக விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டனர். இராணுவத்தினரும் பிரசன்னமாகியிருந்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினரும் கு.திலீபன், சரியான முறையில் விசாரணை நடைபெறும் என உயிரிழந்த இளைஞனின் தாயார் மற்றும் உறவினர்களுக்கு வாக்குறுதியளித்து போராட்டத்தை கைவிடுமாறு கோரினார். பின்னர், இரவு 11.50 மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டது. (த-18)



*இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த*

# சுமார் 40 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு பொருள்கள் மீட்பு!

மன்னார், ஜன. 3

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சுறாஇறகு, கடலட்டைகள், மஞ்சள் கட்டிகள் என சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மண்டபம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பறிமுதல்செய்யப்பட்டுள்ளன. 34 மூடைகளில் பதுக்கப்பட்டிருந்த ஆயிரத்து 700 கிலோ மஞ்சள், 13 மூடைகளில் பதுக்கப்பட்டிருந்த 400 கிலோ சுறா இறகு, பதப்படுத்திய 100 கிலோ கடலட்டைகள் என்பனவே அவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-56)

# விவசாயிகளுக்கு உபகரணங்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின், பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ், நெல்லியடி வடக்கு விவசாய அமைப்பைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு, விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரரின் இணைப்புச் செயலாளர் என்.தவராஜா விவசாயிகளுக்கு உபகரணங்களை வழங்கினார். (ஒ-4-159)

# சர்வதேசதர நிலைமைக்கு வடக்கு-கிழக்கு வீரர்கள்

## ஜப்னா கிங்ஸ் அணியின் முகாமையாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3

வடக்கு - கிழக்கிலுள்ள திறமையான வீரர்களை இனங்கண்டு, அவர்களை சர்வதேச தர நிலைமைக்குக் கொண்டுசெல்வதை ஜப்னா கிங்ஸ் அணி இயன்றளவு செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்தார் அந்த அணியின் முகாமையாளர் ஹரி வாகீசன்.

எல்.பி.எல். தொடரில் சம்பியனான ஜப்னா கிங்ஸ் அணியின் வெற்றிக்கிண்ணம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதையடுத்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது அணியானது வடக்கு - கிழக்கை மையப்படுத்தி தமிழ் வீரர்களை அணியில் இடம்பெறச்செய்தது. வடக்கு - கிழக்கில் துடுப்பாட்டத்தில் திறமையான வீரர்கள் பலர் இருக்கின்றநிலையில், அவர்கள் தேசிய மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு கடந்தகால போர் ஒரு காரணமாக அமைந்தது. தற்போது அவ்வாறான நிலையில்லை. திறமையான வீரர்களை இனங்கண்டு, அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தி வழங்கும் வகையில் ஜப்னா கிங்ஸ் தொடர்ந்து செயற்படும். இந்தவருடமும் சில வீரர்களை அணிக்குள் உள்வாங்கத் திட்டமிட்டுள்ளோம். உரிய நேரத்தில் அதற்குரிய திட்டங்கள் வெளிப்படுத்தப்படும் - என்றார். (ம-20)

# எந்தப் பதவியையும் இனி ஏற்றுக்கொள்ளமாட்டேன்

## ஜனாதிபதியின் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 3

ஜனாதிபதியின் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்டதன்பின்னர், அரசாங்கத்தின் ஆலோசகர் பதவிக்கோ அல்லது வேறு அரச பொறுப்புக்களையோ ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளாரென தென் இலங்கை பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

"நான் வேலையில்லா பட்டதாரி கிடையாது என்பதனால், அரசாங்கத்திடம் பதவி ஒன்றை எதிர்பார்த்து காத்திருக்கப் போவதில்லை. எதிர்வரும் நாள்களில் ஓய்வாக இருக்க விரும்புகின்றேன். சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோரின் அரசாங்கங்களில் முக்கிய பொறுப்புக்களை வகித்தநான், எனது தொழில் அனுபவங்களை ஒன்றுதிரட்டி நூல் ஒன்றை எழுத உள்ளேன்.

எனினும், ஜனாதிபதியின் புதிய செயலர் ஏதேனும் உதவி தேவையெனின் அதனை செய்யத் தயார் என்றும் பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சில அமைச்சர்களின் அழுத்தம் காரணமாக அவரை நீக்கவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு எழுந்திருந்தது. (த-இ)

# யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி துரிதப்படுத்தும் நாமல் ராஜபக்ச

யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளையும் அமைச்சர் நாமல் ராஜபக்ச விரைவுபடுத்தியுள்ளார். அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக நாமல் ராஜபக்ச மேலதிகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பணிகள்வி ரைவுபடுத்தப்படுகின்றன.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் மாநாட்டு மண்டபத்தின் மிகுதி வேலைகளுக்காக 2.9 மில்லியன் ரூபா, நலன்புரி முகாம்க ளில் தங்கியுள்ள காணியற்ற குடும்பங்களுக்காகக் கொள்வனவுசெய்து வழங்கப்பட்ட காணியில் குடியேறிய 52 குடும்பங்களுக்கு குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்துக்கு 17 இலட்சத்து 68ஆயிரம் ரூபா, நலன்புரி நிலையங்களிலிருந்து மீள்குடியேறிய மக்கள் மற்றும் ஏனைய மீள்குடியேறிய 1,227 குடும்பங்க ளுக்கான மின்சார இணைப்பு வழங்க 284 இலட்சத்து 5 ஆயிரத்து 50 ரூபா, மீள்குடியேறிய வறு மைக்கோட்டுக்கு உட்பட்ட 648 குடும்பங்களுக்கான மலசலகூடங்களை வழங்கும் திட்டத்துக்காக 453 இலட்சத்துக்கு 60 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (த-இ)

**கண்ணீர் அஞ்சலி**



மட்டுவில் தெற்கைச் சேர்ந்த
ஓய்வுநிலை ஆசிரியை
**திருமதி இரத்தினவதனா அருட்செல்வம்**
அவர்கள் 02.01.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**
(CR36958)1-6
**சண்முகநாதன் குடும்பம் விநாயகர் ஸ்ரோர்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருடம்

# டெங்குத் தொற்றால் 27 பேர் உயிரிழப்பு



**கொழும்பு, ஜன. 3**

**டெங்கு நோய் காரணமாக கடந்த வருடம் 27 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும், 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த ஆண்டு பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.**

இதுவரை, 2019 இல் 31ஆயிரத்து 162 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். எனினும், கடந்த ஆண்டு 19ஆயிரத்து 87 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் அடையாளம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை, 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கு குறைவடைந்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (த-இ)

## பொலிஸ் சேவையில் தகுதியற்ற 5,000 பேர்!

கொழும்பு, ஜன. 3

நாட்டில் பொலிஸ் சேவைக்குத் தகுதியில்லாத 5 ஆயிரம் பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் உள மற்றும் உடல் ஆரோக்கிய காரணங்களின் அடிப்படையில் ஓய்வுறுத்தப்பட வேண்டியவர்கள்.

இத்தகையவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால், பொலிஸ் திணைக்களத்தின் ஒழுக்க நெறிகளைப் பேணுவதில் சிக்கல்கள் உருவாகியுள்ளன.

பல்வேறு பயங்கரவாதச் செயற்பாடுகளால் உபாதைகளுக்கு உள்ளான 537பேரும், பொலிஸ் பணிகளில் ஈடுபட்ட போது நோய்வாய்ப்பட்ட ஆயிரத்து 305 பேரும், தொற்றா நோய் களால் பாதிக்கப்பட்ட 2ஆயிரத்து 699 பேரும், உளவியல் ஆரோக்கியப் பிரச்சினைகள் காரணமாக இலகு பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள 411 பேருமாக 5 ஆயிரம் பேர் உள்ளனர்.

இவர்களுக்குப் பதிலீடாக புதியவர்களை நியமிக்க பொலிஸ் மா அதிபர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் 85 ஆயிரம் பேர் கடமையாற்றி வருகின்றனர். (த-இ)

## நிர்வாகசபை கூட்டம்

சாவகச்சேரி, ஜன.3

நாவற்குழிமேற்கு ஜே/ 294 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது சங்கத்தின் தலைவராக ஆ.பெர்னாண்டோ செயலாளராக கு.டருஷன், பொருளாளராக மா.விக்கி னேஸ்வரன், உபதலைவராக ம.சிறிபாலா, உபசெயலாளராக பி.ரமணன், போஷகராக செ. குமாரசாமி ஆகியோரும், சபை உறுப்பினர்களாக இ.யோகேஸ்வரன், து.நிதர்சன், ம.தினேஸ், விஜயமுரளி, சத்தியராஜ், தயாளன், அ.வினோத்ராஜ், ஜெரோசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-ரி-159)



## கழிவகற்றலுக்கு புதிய கட்டடம்!

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட காக்கைதீவுப் பகுதியில் திண்மக் கழிவுகளைத் தரம்பிரித்து அதனை முறைப்படியாக அகற்றுவதற்காக புதிய கட்டடமொன்று யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் ஏற்கனவே இயங்கிவரும் திண்மக் கழிவகற்றல் பகுதியில் அந்தச் செயற்பாட்டை மேலும் ஊக்குவிக்கும் முகமாகவே புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் மாநகரசபை ஆணையாளர், மாநகரசபை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-125)

## 11 உர நிறுவகங்கள் மூலமாக 150 கோடி ரூபா மோசடி

விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 3

2018 - 2020 வரையிலான காலப்பகுதியில் 11 உர நிறுவனங்களுக்குத் தேசிய உரச் செயலகத்தின் ஊடாக, 150 கோடி ரூபாவுக்கும்அதிகதொகை செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது பற்றிய தகவலை கணக்காய்வாளர் திணைக்களம் வெளிப்படுத்தியிருந்தது என்றும் கமத்தொழில் அமைச்சின் ஊடாக இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் சந்தன ஹெவகே தெரிவித்தார். (த-இ)



## காதல் ஜோடிகள் விபத்தில் சாவு!

கொழும்பு, ஜன. 3

பண்டாரகம கெஸ்பேவ வீதியில் வெல்மில்ல பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், காதல் ஜோடிகள் என்று கூறப்படும் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஆணும், கண்டி பிரதேசத்தில் வசிக்கும் 19 வயதுடைய பெண்ணுமே உயிரிழந்துள்ளனர். இருவரும் ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்தனர் என்றும், அது வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளானது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## ஆலய விக்கிரகங்கள் உடைப்பு: அக்கரப்பத்தனையில் பதற்றம்

கொழும்பு,ஜன.3

அக்கரப்பத்தனை நகரத்திலுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நேற்று அதிகாலை விக்கிரகங்கள் மற்றும் சிலைகள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இதனால் அந்தப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அக்கரப்பத்தனை நகரத்தில் இதுவரை காலமாக ஆலயம் ஒன்று இல்லாத நிலையில், புதிதாக புனரமைக்கப்பட்ட ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலேயே இவ்வாறு சிலைகள் மற்றும் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆலயத்தின் கும்பாபிஷேகம் இந்தமாதம் இடம்பெறவுள்ள நிலையில், இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை பதற்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அக்கரப்பத்தனை நகர வர்த்தகர்கள் கடைகளை மூடி, ஆலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடி,தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். சம்பவம் தொடர்பில் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஓ-4-இ)

## கால்நடை கூ.சங்கம் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.3

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மீளவும் தனது செயற்பாட்டை சண்டிலிப்பாயில் ஆரம்பித்துள்ளது.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்கனவே அங்கத்துவம் பெற்றவர்களின் பெயர், விவரம் மீளவும் உறுதிப்படுத்தப்படவுள்ளதால் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் பண்டத்தரிப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் உள்ள பதிவுக் காரியாலயத்தில் தங்களுடைய பெயர், விவரங்களைப் பதிவு செய்து அங்கத்துவத்தை மீள வலியுறுத்திக் கொள்ளுமாறு அபிவிருத்தி அலுவலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இந்த வருடத்திலிருந்து சங்க அங்கத்தவர்களுக்கு மானிய அடிப்படையில் கால்நடை உதவிகள் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளன.

ஆகவே, வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி.-50)

## வெள்ளம் தேங்கிய வீதிபோக்குவரத்தில் சிரமம்!

சாவகச்சேரி, ஜன. 3

சாவகச்சேரி அஞ்சலகவீதி சீரமைப்புச் செய்யப்பட்டுவந்த நிலையில், பணிகள் அனைத்தும் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதியால் பயணம் மேற்கொள்பவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். வீதியில் வெள்ளம் பெருமளவில் தேங்கி, வாகனங்களில் தொடர்ச்சியான போக்குவரத்தால் வீதி தற்போது குண்டும் குழியுமாக மாறியுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் வீதியைத் துரிதமாக சீரமைத்துத் தரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
.
11
.
1946



மறைவு
02
.
01
.
2022

## பொன்னையா இரத்தினம் (பொன் இரத்தினம்)

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - சாவகச்சேரி)

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் தற்போது அளவெட்டியில் அலுக்கைச் சந்தியில் வசித்து வந்தவருமாகிய பொன்னையா இரத்தினம் நேற்று (02.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கிருபநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா வள்ளிப்பிள்ளை ஆகியோரின் தவப் புதல்வனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை இராசமணி ஆகியோரின் மருமகனும், குமாரசாமி காலஞ்சென்ற சபாரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரனும், வசீகரன் (வசி போட்டோ-நுணாவில்), நிதர்சன் (லண்டன்), பிரகாஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜித்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - பச்சிலைப்பள்ளி), அஜந்தி (லண்டன்), சிவரூபினி (மென் பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவனுஜ, லக்ஸான், ரக்ஸ்சன், அபினா, அக்சரன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அளவெட்டி இல்லத்தில் பிற்பகல் 2.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நுணாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.01.2022 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 609 6992
077 710 9965

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 36959) 1/6

## கலந்துரையாடல்

கொரோனாக் கால பின்னடைவுகளை இந்த வருடம் சீர் செய்யும் வகையில், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் பிரிவில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு விசேட கலந்துரையாடல்களை, பிரதி புதன்கிழமைகளில் பி.ப. ஒரு மணிக்கு பணியகத்தில் நடத்த ஆரம்பித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை வெதுப்பக உரிமையாளர்களுக்கு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை, பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.


இதில் பிரதேசத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களை பங்குபற்றுமாறு அறிவித்துள்ளனர்.

(ஒ-ரீ-9)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் திருமதி க. உஷாந்தினி அவர்களின் பாசமிகு தந்தையார்

தோற்றம் 11.06.1942 மறைவு 01.01.2022



அமரர்
## நாகலிங்கம் அம்பிகைபாகன்


எம்மைவிட்டு மறைந்து போனாலும்
உங்களது பாச நினைவுகள் என்றும்
எம்மை விட்டகலாது கண்ணீருடன்
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ...ஓம் சாந்தி...ஓம் சாந்தி..

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம்,
காரைநகர்

(CR 36957) 1-6

# விண்ணக வாழ்வின் 01ஆம் ஆண்டு நினைவாக

அன்னை மடியில்
27
.
11
.
1958



ஆண்டவன் அடியில்
03
.
01
.
2021

## அமரர் அருளப்பு எட்வின் ரவீந்திரன்

(றோடியோ மெக்கானிக்)

ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்
அப்பா உங்களை போல அன்பு செய்ய யாருமில்லை
எங்களுக்காக நீங்கள் சிந்திய கண்ணீர் துளிகளில்
உங்கள் நினைவுகள் பிரதிபலிக்கிறது.
எங்கள் மனதில் நிறைந்திருக்கும் அன்பு அப்பாவுக்கு
முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்.

பிரிவால் வருந்தும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS 41958) 1-6

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வரத்தினம் சரஸ்வதி

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் சரஸ்வதி அவர்கள் நேற்று (02.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-மாணிக்கம் தம்பதியரின் மூத்த புதல்வியும், கனகரத்தினம், தங்கம்மா தம்பதியரின் மருமகளும், செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், பாலரூபி, சுகிர்தரூபி, துசிதன், கோபிசாந் ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராசசிங்கம், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், அஷ்சனா, அக்சயன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஸ்ரீனிவாசன் மற்றும் கோபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (சிறுபிட்டி) நடைபெற்று, தகனக்கிரியைகள் பத்தகலட்டி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 706 3016

(CS 922) 1/6

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01
.
12
.
1945



மறைவு
13
.
01
.
2021

## அமரர் சின்னத்துரை குமரவேல் (J.P)

(ஓய்வுபெற்ற நூலகர், பொதுநூலகம், சுன்னாகம்
முன்னாள் தலைவர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்
முன்னாள் விவாகப் பதிவாளர், வலிகாமம் வடக்குப் பிரிவு)

திதி:அமாவாசை (02.01.2022)

ஆண்டொன்று ஓடி மறைந்ததுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்– எம்
ஆருயிர் அப்பாவைப் போல் வருமா?
ஊர் போற்றும் உத்தமராய்
செல்வாக்கு மிக்கவராய்
சென்ற இடம் சிறப்பித்து
வாயாரப் புன்னகைத்து
வாஞ்சையுடன் வரவேற்று
வந்தோரை உபசரித்து
வாழ்வாங்கு வாழ்ந்த அப்பா – இன்று
மௌனமாய் மாயமானார்
சாந்தி! சாந்தி!!! சாந்தி!!

'திருவேரகம்'
முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முடிவிலியாக நீளும் சாபம்...!


ஒற்றுமைக்கும் தமிழர்களுக்கும் எட்டாப் பொருத்தம். என்னதான் கட்சி ரீதியாக கீரியும் பாம்பும்போல பகையாளிகளாக இருந்தாலும் கூட, தம்மினத்தின் நலனுக்கான விடயமென்று வந்துவிட்டால், சிங்களக்கட்சிகள் எல்லாமே ஒருபுள்ளியில் இணைந்துவிடுகின்றன. இப்படி அவை தமக்கு இடையேயான பேதங்களை மறந்து ஓரணியில் நின்றதாலேயே தமிழர்களுக்கு எதிரான பல சட்டங்களை நிறைவேற்ற முடிந்தது. இணைந்திருந்த வடக்கு–கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க முடிந்தது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை நசுக்கமுடிந்தது. இப்போதுகூட, கோத்தாபய அரசாங்கம் மிகப்பெரும் நிதிநெருக்கடியில் தத்தளிக்கையில், 'சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுங்கள்', 'இந்தியாவிடம் செல்லுங்கள்' என்று எங்கெல்லாம் நிதிமூலங்களைப் பெறும் வழிவகைகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் கண்டுபிடித்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள் எதிர்க்கட்சியிலிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும். கூடவே " இவற்றையெல்லாம் அரசியலாக்கவோ விமர்சிக்கவோ மாட்டோம்" – என்று உறுதிமொழியும் கொடுக்கிறார்கள். அவ்வாறு இடுக்கண் வரும்போதெல்லாம் உடுக்கை இழந்தவன் கைபோல உதவுவதாலும், தமதுஇன நலனுக்காகவும், பிற இனங்களை ஒடுக்குவதற்காகவும் ஒன்றுபட்டு நிற்பதாலுமே அவர்கள் அப்படி இருக்கிறார்கள்; நாம் இப்படி இருக்கின்றோம்.

சிங்களக்கட்சிகளுக்கு நேரெதிரான தன்மை கொண்டவை சிறுபான்மைக் கட்சிகள். அதிலும் தமிழ்க் கட்சிகள் பற்றி சொல்லவே வேண்டாம். என்னதான் பிரளயமே வந்தாலும் கூட, ஒரே புள்ளியில் தமிழ்க் கட்சிகளைக் கொண்டுவருவதென்பது கடவுளால் கூட முடியாத காரியம். எப்போதும் பிரிந்தே நிற்பதும், எந்தக் காரியம் என்றாலும் அதைத் தமது தனிப்பட்ட நலனுக்காக குழப்பியடிப்பதுவும் தமிழ் அரசியல் கட்சிகளின் சாபக்கேடு. இந்தச் சாபம், இந்தியப் பிரதமருக்கு ஆவணம் அனுப்பும்விடயம் வரைநீண்டுகொண்டே வருகின்றது. தமிழ் மக்களின் கோரிக்கைகளை உள்ளடக்கி ஒரு ஆவணத்தைத் தயாரித்து , 'எமது பிரச்சினைகளைத் தீர்க்க ஏதாவது செய்யுங்கள்' என்ற வழக்கமான ஒரு கோரிக்கையை சகல தமிழ்க் கட்சிகளும் இணைந்து, தமது பிரதமருக்கு அனுப்பவேண்டுமென இந்தியா எதிர்பார்க்கின்றது. அந்தக் கோரிக்கையை அடிப்படையாக வைத்து, மீண்டும் இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதே இந்தியாவின் திட்டமாகவும் இருக்கக்கூடும். 'சர்வதேசம் தீர்வைத் தரும்' என்று ஒவ்வொரு தீபாவளியையும், பொங்கலையும், புதுவருடத்தையும் பார்த்தபடி இலவு காத்த கிளியாக இருக்காமல், சாத்தியமான சில வழிகளை அணுகுவதற்கு இந்தியாவின் அனுசரணை தமிழர்களுக்கு அவசியம். என்னதான் இலங்கை அரசாங்கமே முன்வந்து 'இந்தாருங்கள் தனிநாடு' என்று தந்தாலும்கூட, இந்தியா அதை விரும்பா விட்டால் அந்தவிடயம் உருப்படவேமாட்டாது. அந்தளவுக்கு இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாக இந்தியாதான் தொன்றுதொட்டு இருக்கின்றது. எனவே விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவைத் தமிழர்கள் அனுசரித்துச் சென்றேயாகவேண்டும்.

அதற்கு மாறாக, இந்தியாவுக்கு விரோதமாக தமிழர் தரப்பு நடந்துகொள்வதென்பது நமது தலையில் நாமே மண்ணள்ளிப்போடும்செயலே. ஏனெனில் இலங்கை அரசாங்கத்தின் பக்கமே சீனா நிற்கின்றது. இந்தியாவும் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தால், எஞ்சியிருப்பது அமெரிக்கா உள்ளிட்ட சில சர்வதேச நாடுகளே. என்னதான் உலகப் பொலிஸ்காரனாக இருந்தாலும்கூட, பிராந்திய வல்லரசுகளைத்தாண்டி, அமெரிக்காவோ, ஐ.நாவோ, இன்ன பிற நாடுகளோ இலங்கையில் எதையும் செய்துவிட முடியாதென்பதே யதார்த்தம். எனவே சீனாவுக்கு எதிராக காய்நகர்த்த, தமிழர் தரப்பின் ஆதரவு இந்தியாவுக்கு தேவைப்படும் இந்தச் சமயத்தில், தமிழ்க் கட்சிகள் ஒருமித்த கோரிக்கையை விடுப்பதால் தமிழர் தரப்புக்கு ஆதாயமே. ஆனால், இந்தக் கோரிக்கைக்கு இந்தியா செவிசாய்த்து, ஏதும் உருப்படியான விடயம் நடந்துவிட்டால் இன்னொரு கட்சிக்கு நல்லபெயர் கிடைத்துவிடுமே என்ற காழ்ப்புணர்வாலோ என்னவோ , தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் பின்னடிக்கின்றது; ஒரு பொது முடிவை எட்டவிடாமல் இழுபறியை உண்டாக்குகின்றது. இப்போது தயாரிக்கப்படும் பொது ஆவணம் ஒன்றும், முடிந்த முடிவல்ல. இதில் குறிப்பிடப்படும் விடயங்கள் மாற்றப்பட முடியாதவையும்அல்ல. சாதாரண ஒரு கோரிக்கைக் கடிதம், அவ்வளவே. அதற்கே இவ்வளவு பாடென்றால், ஒரு வேளை சமஷ்டி ஆட்சியை எம்மிடம் தந்து, அதற்கான அறுதியும், இறுதியுமான வரைபை உருவாக்கச் சொன்னால் என்ன நடக்கும்...?

நாளொரு நல்வார்த்தை

"நீ ஊமையாக இருக்கும்வரை உலகம் செவிடாகத்தான் இருக்கும்"
– சே குவேரா




# சவப்பெட்டிக்குள் நாட்டை தள்ளியுள்ளது அரசாங்கம்

### சஜித் ஆவேசம்

**கொழும்பு, ஜன. 3**



**அரசாங்கத்திலுள்ள பெரியபுள்ளிகள் அனைவரும் இணைந்து நாட்டை சவப்பெட்டிக்குள் அடைத்துள்ளனர். தற்போது அவர்கள் சவப்பெட்டிக்கான கடைசி ஆணிகளை அடித்துவருகின்றனர். கப்ரால் நாட்டையும், பொருளாதாரத்தையும் மயானத்தை நோக்கி கொண்டு செல்ல வழிசெய்கின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

கடந்த 31ஆம்திகதி தன்னால் முன்னெடுக்கப்பட்ட மக்கள் சந்திப்பு நிகழ்வில் வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் ஏதாவது மிச்ச மிகுதி இருந்தால் அதனையும் விற்பதற்கு ஏழு மூளையாளி நடவடிக்கை எடுத்து வருகின்றார். அடுப்புக்கான விறகு சுப்பர் மார்க்கெட்டில் விற்கப்படுகின்றது. சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கின்றன. திரவ உரக் கொள்கலன்கள் வெடிக்கின்றன. சுற்றறிக்கைகள் மீளப் பெறப்படுகின்றன. இரவு, பகல் பாராது பணம் அச்சிடப்படுகின்றது. நாட்டைக் கட்டியெழுப்புவதில் தோற்றுப்போன அரசாங்கம், நாட்டை தோல்வி அடைய செய்வதில் மாத்திரம் வெற்றிபெற்றுள்ளது - என்றார். (ம)

# சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்!

### குறிப்பறிந்து செயற்படுமாறும் தமிழ்க் கட்சிகளிடம் ஆனந்தன் கோரிக்கை

வவுனியா, ஜன. 3

தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தபோதும், அவற்றை நழுவவிட்டமைதான் கடந்த கால வரலாறாகவுள்ளது. தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில் அதனை நழுவ விட்டுவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்க வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகளும், ஏனைய முஸ்லிம், மலையகக் கட்சிகளும் இணைந்து தமிழ்பேசும் கட்சிகளாக பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள ஆவணத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது.

இதை அனுப்புவதன் ஊடாக, இலங்கை மீதான தனது பிடியை இந்தியா உறுதிப்படுத்தும் அதேநேரம், ஆகக்குறைந்தது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும். எனவே குறிப்பறிந்து, தீர்க்கமான தீர்மானத்தை எடுக்கும் அதே நேரம், தாமதங்களைத் தவிர்த்து விரைவாக கூட்டு ஆவணத்தை அனுப்பிவைக்க வேண்டும் - என்றுள்ளது. (கு-இ)

நாளை
04.01.2022
செவ்வாய்க்கிழமை
மார்கழி 20

சுபநேரம் : 11.01 - 12.31
ராகுகாலம் :03.31 - 05.01

சர்வதேச ப்ரெய்ல் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்


# விடுபட்ட பாடத்திட்டங்கள் இந்த வருடத்தில் பூர்த்தி

கொழும்பு.ஜன.3

பாடசாலை மாணவர்கள் புதிய வகுப்புகளுக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ள போதிலும், கடந்த தரங்களில் விடுபட்ட பாடத்திட்டங்கள், இந்த வருடத்தில் முழுமை செய்யப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் கல்வித்துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிப்பு விடுவிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டின் முதலாம் தவணை இன்று ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-இ)

# மாணிக்க கங்கைக்கு புதிய நுழைவாயில்

## ஜனாதிபதியின் தலைமையில் நிர்மாணப்பணிகள் ஆரம்பம்



கொழும்பு, ஜன. 3

கதிர்காமம் பெரியகோவில் தீர்த்தமான மாணிக்க கங்கைக்குரிய புதிய நுழைவாயில் சுவர் நிர்மாணப்பணிகள், ஜனாதிபதி கோத்தாபய தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

ஜனாதிபதி கோத்தாபய, அமைச்சர்களான சமல் ராஜபக்ச, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச உட்படப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (ம)



# மஞ்சள் அறுவடை

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்ப்பாணத்தில் முன்னுதாரணமான முறையில், பொதியிடப்பட்ட மஞ்சள் செய்கை அறுவடை செய்யப்பட்டது.

மானிடம் அறக்கட்டளையின் மானிடம் விவசாய வழிப்பண்ணையால் மஞ்சள் செய்கை மேற்கொள்ளப்பட்டது. வெற்றிகரமாக 10 கிலோகிராம் மஞ்சள் நேற்று முன்தினம் அறுவடை செய்யப்பட்டுள்ளது. (ஒ-4-125)

# முதலாம் பக்க தொடர்ச்சிகள்...

## உணவுத்....

ராஜபக்சதான் நூறு வீதம் காரணம்.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா. நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரிசி ஒரு கிலோ 160 ரூபாவுக்கும், நெத்தலி 850 ரூபாவுக்கும், மரக்கறிகளின் விலைகள் 500 ரூபாவுக்கும் மேற்பட்டதாகவும் இருக்கின்றன. பச்சைமிளகாய் ஒரு கிலோ ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. தம்புள்ளயில் பச்சைமிளகாய் மூடை ஒன்று களவாடப்பட்டுள்ளது. மஞ்சளின் விலை 4 ஆயிரத்து 200 ரூபா. நாட்டில் மக்கள் வாழமுடியாதநிலை. இதுதான் உண்மைக்கதை. 2022ஆம் ஆண்டு பெரும் அழிவொன்று ஏற்படப் போகின்றது. உணவுப் பிரச்சினைக்கு கொரோனாத் தொற்றுக் காரணம் அல்ல. கொரோனாத் தொற்று பரவ ஆரம்பித்திருந்த காலத்தில் அத்தியாவசிய சேவைகளாக அரிசி ஆலைகள் செயற்பட்டன. விவசாயிகளும் அவர்களின் வேலைகளைப் பார்த்தார்கள். அவர்கள் வீட்டில் முடங்கியிருக்கவில்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவே நூறுவீதம் இந்தப் பிரச்சினைக்குக் காரணம்-என்றார். (எ-இ)

## புதிய அரசு...

வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு தற்போது பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான செல்வாக்கும் குறைவடைந்துள்ளது. மக்களால் அரசாங்கத்தின் மீது சரமாரியாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எல்லாப் பிரச்சினைகளும் கொரோனாவால் ஏற்பட்டவையும் அல்ல. உரப்பிரச்சினையை தாமாக இழுத்துக்கொண்டது அரசாங்கம். இதனால் நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடையும். இந்தியாவில் இருந்துவரும் அரிசியைத்தான் உண்ணவேண்டிவரும். அப்போது இரசாயன உரப் பிரச்சினை வராதா?

எரிவாயுப் பிரச்சினையும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கு பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு தண்டனையை மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதை ஜனாதிபதி பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்காகத்தான் 20 ஆம் திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

தவறான ஒரு சில தீர்மானங்களால் ஒட்டுமொத்த அரசாங்கமும் சீர்குலைந்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் மாற்று அரசாங்கத்தை ஏற்படுத்தினால்கூட மாற்றம் ஏற்படப்போவதில்லை. அவ்வாறு உருவாகினால்கூட அந்த அரசாங்கமும் ஆறு மாதங்களுக்குள் வீழ்ந்துவிடும்-என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இது உங்கள் கனவுகளுக்கான
உங்கள் தருணம் !

உங்களை சூழ பல்வேறு சாத்தியக்கூறுகள்
உங்களுக்காகவே இணைக்கப்பட்டு, வலுவூட்டப்பட்டு,
காத்திருக்கின்றது.

முன் ஒருபோதும் இல்லாத தொழினுட்ப மேம்பாடு
முன் ஒருபோதும் இல்லாத மனிதகுல இணைப்பு
முன் ஒருபோதும் இல்லாத அறிவியல் அணுகுமுறை
இவ்வாறு வானளந்த வாய்ப்புகள், இன்று உங்கள் கையகம்

வீண் இன்றி,
நுகருங்கள்.

உதயமாகும் 2022, உங்களை ஏற்று அணைக்கட்டும்.

நம் கனவுகள் தொலைவில் இல்லை

www.sltmobitel.lk

SLTMOBITEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதி மறுக்கப்பட்ட நிலையில்
## திருகோணமலை ஐவர் படுகொலை

**திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட 16ஆவது நினைவு தினம் நேற்றாகும். சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் பணியாளரான பொஸ்டர் இந்தச் சம்பவம் தொடர்பில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**

நன்றி: மாற்றம்



திருகோணமலை கடற்கரையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் படுகொலைகள் 'திருகோணமலை ஐவர் சம்பவம்' என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் தண்டனைக்கு அச்சமின்றி குற்றச்செயல்களை நிகழ்த்தும் போக்கை எடுத்துக்காட்டும் ஒரு குறியீட்டுச் சம்பவமாக அது இருந்து வருகின்றது. கொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான மருத்துவர் மனோகரனின் துணிச்சல் காரணமாக இந்தச் சம்பவம் பிரபல்ய மடைந்தது. இந்தக் கொலையில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தை மனோகரன் அறிந்திருந்ததுடன், இது தொடர்பாக தொடக்கத்தில் நடத்தப்பட்ட ஒரு விசாரணையில் அவர் சாட்சியமளித்திருந்தார். திருகோணமலை ஐவருக்கு நீதியைக் கோரும் முயற்சியில் உள்ளூர் செயற்பாட்டாளர்களுடன், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இணைந்திருந்தன. இந்தச் சம்பவம் பரவலான விதத்தில் கவனத்தை ஈர்த்திருந்ததுடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் 2007ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: 'இந்தக் குற்றச் செயலை நிகழ்த்துவதில் சீருடை அணிந்த ஆளணியினர் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதனை அனுமானிப்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருந்து வருகின்றன.' எவ்வாறிருப்பினும், இது தொடர்பான வினைத்திறன் மிக்க புலன் விசாரணைகள் முடங்கியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக வினைத்திறன் மிக்க விதத்தில் புலன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென 2007ஆம் ஆண்டின் ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. மேலும், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் இது தொடர்பாக மீண்டும் மீண்டும் பரிந்துரைகளை முன்வைத்திருந்தது. இவற்றுக்கு மத்தியிலும் கூட, இந்த விசாரணைகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வந்துள்ளன. இந்த வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆமை வேகத்தில் இடம்பெற்று வந்த நிலையில், சந்தேகநபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்து, பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். அதன் பின்னர் போதியளவில் சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் இது தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சந்தேகநபர்கள் 'விடுவிக்கப்படுகின்றனர்' என்று 2019ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்ப்பு இலங்கையின் குற்றவியல் நீதித்துறை தொடர்பான தமது நம்பிக்கையை தகர்த்தெறிந்த ஒரு குண்டுத் தாக்குதலாக இருந்து வந்தது.

### அவகாசமும் இழுத்தடிப்பும்

உண்மையைக் கண்டறிந்து கொள்வதற்கான உரிமையை சம்பந்தப்பட்டவர்களுக்கு மறுத்திருக்கும் 'திருகோணமலை ஐவர்' போன்ற வழக்குகள், குற்றச் செயல்கள் தொடர்பாக இலங்கையின் பாதுகாப்புப் படையினரை குற்றவாளி களாக்கும் விடயத்தில் இலங்கையின் நீதித்துறை தோல்வி கண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன. மனோகரன் தனிப்பட்ட துயரத்துக்கு மத்தியிலும் கூட, நீண்டகாலமாக முன்னெடுத்து வந்த ஒரு பரப்புரையின் ஊடாக இது தொடர்பான நிவாரணங்களைக் கோரியிருந்தார். 2007ஆம் ஆண்டின் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு காணொலி மூலம் சாட்சியமளிக்கும் நடைமுறையை இடைநிறுத்தியது. அத்துடன், அந்த ஆணைக்குழு அதன் அறிக்கையையும் வெளியிடத் தவறியிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில், மனோகரன் இது தொடர்பாக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்திருந்தார். ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் நிகழ்வொன்றின் போது, அதற்கு வெளியில் இடம்பெற்ற ஓர் உரையாடலில் அவர் இது குறித்துப் பேசியதுடன், திருகோணமலையில் மிகவும் கொடூரமான விதத்தில் கொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கும் நேர்ந்த கதி குறித்த உண்மையை இலங்கை அரசாங்கம் கூற வேண்டுமென வேண்டுகோள் விடுத்தி ருந்தார். அரசாங்கம் இது தொடர்பாக காலஅவகாசத்தைக் கோரியிருந்தது. பின்னர் 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை தொடர்பான உலகளாவிய பருவகால மீளாய்வின்போது மனோகரன் இலங்கை அரசாங்கத்திடம் மேலும் ஒரு வேண்டுகோளை முன்வைத்தி ருந்தார்.

அத்துடன், கொலை செய்யப்பட்ட ரஜிகர் மற்றும் அவருடைய நான்கு நண்பர்கள் ஆகியோர் தொடர்பான வழக்கு [illegible] தேவை யான [illegible] றனவா என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கென அந்த விடயம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் சபையில் தெரிவித்தது. இது தொடர்பான மேலும் விசாரணைகளை நடத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். மீண்டுமொரு முறை இலங்கை அரசாங்கம் இது தொடர்பாக மேலும் கால அவகாசத்தைக் கேட்டிருந்தது. இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன் அறிக்கையில் திருகோணமலை ஐவர் படுகொலை சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்ததுடன், இது தொடர்பாக மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு, கொலைக் குற்றவாளிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டுமென வலுவாக பரிந்துரை செய்திருந்தது. இப்பொழுது 13 வருடங்கள் கழிந்திருப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கின்றது? திருகோணமலை ஐவர் சம்பவம் பொறுப்புக் கூறும் விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் செய்யக் கூடிய காரியங்களை எடுத்துக் காட்டும் ஒரு அமிலப் பரிசோதனையாக இருந்து வருகின்றது. கொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களும் அவர்கள் தமிழ் இளைஞர்களாக இருந்து வந்தார்கள் என்பதைத் தவிர, வேறு எந்தவொரு காரணமும் இல்லாத நிலையில் சுடப்பட்டிருந்தார் கள். சிங்கள மற்றும் முஸ்லிம் நண்பர்களைக் கொண்டிருக்கும் மனோகரன் இந்தச் சம்பவத்தை அரசியல்மயமாக்குவதற்கென எடுக்கப்பட்ட முயற்சிகளை எதிர்த்தார் - வெறுமனே அவருக்கு பதில்கள் மட்டுமே தேவையாக இருந்தது. அதேபோன்று எம் அனைவருக்கும் இது தொடர்பான பதில்கள் தேவைப்படுகின்றன.

மிகச் சமீபத்தில் இது தொடர்பாக ஏற்பட்டிருக்கும் மாற்றம், மீண்டுமொரு முறை இது குறித்துக் குரல் எழுப்புவதற்கும், திருகோணமலை ஐவர் சம்பவம் குறித்த உண்மையைக் கண்டறிந்து கொள்வதற்கான தனது முயற்சிகளுக்கு இலங்கை வாழ் பொது மக்களின் ஆதரவைக் கோருவதற்கும் அவரை நிர்ப்பந்தித்துள்ளது. குற்ற வாளிகள் விடுவிக்கப்பட்டதையடுத்து, அவருடன் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் பின்வரும் விடயங்களையே எங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பினார்:

### மாணவர்களுக்கு புலிச்சாயம்

என்னுடைய பெயர் மருத்துவர் கைலாசபிள்ளை மனோகரன். என்னுடைய அன்பு மகன் ரஜீகர் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி இலங்கைப் படையினரால் கொலை செய்யப்பட்டார். - - -

(மறுபக்கம் பார்க்க)

ஓராண்டு நினைவஞ்சலி



சின்னத்தம்பி வள்ளியம்மை
பிறப்பு 23.02.1924
இறப்பு 13.01.2021
திதி: பிரதமை
ஆண்டொன்று கடந்தாலும் அகலாது
உங்கள் நினைவு
அம்மா அம்மா என்று அழைக்கின்றோம்
கேட்கவில்லையோ....
"எங்கு தேடி அலைந்தாலும் நாம்
மீண்டும் அமர முடியாத சிம்மாசனம்
தாயின் கருவறை தான்"
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்
என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)



**சவச்சாலையில் நான் பார்த்த மூன்று சடலங்களின் தலையில் காயங்கள் இருந்ததுடன், தலையின் பின்பக்கத்தில் அவர்கள் சுடப்பட்டிருந்தார்கள். என்னிடம் புகைப்படங்கள் இருப்பதுடன், மருத்துவரின் அறிக்கை அதனை உறுதிப் படுத்துகின்றது. அந்தச் சடலங்களில் உட்பிரவேசத் துவாரம் சிறியதாக இருந்து வந்ததுடன், வெளிச்சென்ற துவாரம் பெரியதாக இருந்தது. இது அந்தப் பையன்கள் மீது மிக அருகிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது என்பதனைக் காட்டுகின்றது.**

அந்தப் பயங்கரம் நிகழ்ந்த அந்த நாள் தொடக்கம், அங்கு என்ன நடந்தது என்பது குறித்த உண்மையை கண்டறிய வேண்டும் என்பதற்காக நான் இடையறாது முயற்சியை முன்னெடுத்து வந்துள்ளேன்.

எனது மகன் ரஜீகர் என்னுடன் தொடர்பு கொண்ட கடைசித் தருணம் அவர் எனக்கு அனுப்பிய ஒரு மொபைல் தொலைபேசி செய்தியாகும். அதில் வெறுமனே 'DAD' எனக் கூறப்பட்டிருந்து.

அந்தச் செய்தி 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி எனக்குக் கிடைத்தது. என்னுடைய மகன் நல்ல பையனாக இருந்து வந்ததுடன், பரீட்சைகள் முடிவடைந்த மகிழ்ச்சியை திருகோணமலை கடற்கரையில் தனது நண்பர்களுடன் சேர்ந்து அவன் கொண்டாடிக் கொண்டிருந்தான். அன்றைய தினம் கடற்கரையில் ஒரு குண்டு வெடித்த சத்தம் எனக்குக் கேட்டது. எனது ஏனைய மூன்று மகன் களும் வீடு திரும்பினார்கள்.

ஆனால், ரஜிகர் வீடு திரும்ப வில்லை. இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்த ஒருசில நிமிடங்களில் எனக்கு மகனிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது: 'டி' படையினர் என்னைச் சுற்றி வளைத்துள்ளார்கள்' என அவர் கூறினார். பாதுகாப்புப் படையினரையே அவர் குறிப் பிட்டிருந்தார். என்னுடைய மகன் கூறியது அவ்வளவுதான். அதன் பின்னர் ஒரு மௌனம் நிலவியது. அவர் எனக்கு அனுப்பிய கடைசி முடிவுறாத செய்தி அது தான். உடனடியாக நான் அந்த இடத்துக்குச் சென்ற போதிலும், அங்கிருந்த கடற்படை சிப்பாய்கள் என்னைத் தடுத்து நிறுத்தினார்கள்.

நான் உள்ளே செல்வதற்கு அவர்கள் எனக்கு இடமளிக்கவில்லை. 'எங்களுக்கு உதவுகள்! எங்களுக்கு உதவுங்கள்!' என்ற அழுகுரல்கள் எனக்குக் கேட்டன. ஆனால், என்னுடைய மகன் அமர்ந்திருந்த காந்தி சிலைக்கு அருகில் விளக்குகள் வேண்டுமென்றே அணைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அங்குள்ள நிலைமையை என்னால் தெளிவாகப் பார்க்க முடியாதி ருந்தது. அதனையடுத்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதுடன், சிலைக்கு அருகில் இருந்த விளக்குகள் அனைத்தும் அணைந் தன.

கடற்படையினருக்கு சிகிச்சை அளித்திருந்த ஒரு மருத்துவராக இருந்து வந்த காரணத்தால் மருத்துவமனை சவச்சாலைக்குள் பிரவேசிக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலங்களில் ஒன்று எனது மகனுடைய சடலமா என்பதனை நான் தெரிந்துகொள்ள விரும்பினேன். நான் உள்ளே பிரவேசித்த பொழுது, முதலில் பார்த்த சடலம் எனது அன்பு மகன் ரஜிகரின் சடலமாக இருந்தது. அவனுடைய உடலில் ஐந்து துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன. அங்கிருந்த ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் 'எனது மகன் ஒரு தமிழ் புலி' என்று குறிப்பிட்டு, ஒரு பத்திரத்தில் கையெழுத்திடுமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். அதற்கு நான் உடன்பட்டால் உடனடியாக சடலத்தைப் பெற்றுத் தர முடியும் என்றும் அவர் கூறினார். நான் அதற்கு மறுப்புத் தெரிவித்தேன். என்னுடைய மகன் ஒரு நல்ல மாணவன். ஒரு மேசைப் பந்து விளையாட்டு வீரன். அவன் சதுரங்க ஆட்டத்தில் கெட்டிக்காரனாக இருந்து வந்ததுடன், சதுரங்க ஆட்ட பயிற்றுவிப்பாளனாகவும் இருந்து வந்தான்.

### மிக அருகிலிருந்து மாணவர்கள் மீது சூடு

ஒரு கிரனைட் தாக்குதலில் எனது மகன் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கூறியது. ஆனால், சவச்சாலையில் நான் பார்த்த மூன்று சடலங்களின் தலையில் காயங்கள் இருந்ததுடன், தலையின் பின்பக் கத்தில் அவர்கள் சுடப்பட்டிருந்தார்கள். என்னிடம் புகைப்படங்கள் இருப்பதுடன், மருத்துவரின் அறிக்கை அதனை உறுதிப்படுத்துகின்றது. அந்தச் சடலங்களில் உட்பிரவேசத் துவாரம் சிறியதாக இருந்து வந்ததுடன், வெளிச் சென்ற துவாரம் பெரியதாக இருந்தது. இது அந்தப் பையன்கள் மீது மிக அருகிலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது என்பதைக் காட்டுகின்றது. தமக்கென ஓர் எதிர்காலத்தைக் கொண்டிருந்த ஐந்து இளைஞர்கள் இவ்விதம் கொல்லப்பட்டிருந்தார்கள். அன்றைய தினம் மாலை நேரம் நான் ஒரு முடி வுக்கு வந்தேன். இது தொடர்பான உண்மையைக்கூற வைப்பதற்கு அதிகாரிகளுக்கு சவால் விடுக்க வேண்டுமென நான் முடிவு செய்தேன். சம்பவ இடத்துக்கு அருகில் இலங்கை விசேட அதிரடிப்படை வீரர்கள் நிற்பதை நான் பார்த்ததுடன், அவர்கள் தொடர்பாக புலன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டேன்.

இது தொடர்பாக குரலெழுப்பத் தொடங்கியதிலிருந்து எனக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தன. என்னுடைய ஏனைய மகன்மார்களும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டார்கள். சடலங்களின் புகைப்படங்களை எடுப்பதற்காக என்னுடன் சவச்சாலைக்கு வந்த ஊடகவியலாளர் சுகிர்தராஜன் ஒரு சில வாரங்களின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த மாணவர்கள் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டிருந்தார்களென இராணுவம் கூறியிருந்த விடயத்தை அவருடைய புகைப்படங்கள் பொய்யாக்கின. ரஜிகரின் கொலைச் சம்பவத்தைக் கண்டித்திருந்த புத்தபிக்கு ஒருவரும் கொல்லப்பட்டார்.

நானும், எனது குடும்பத்தினரும் இலங்கையில் தொடர்ந்து வசித்து வருவது மிகவும் ஆபத்தானதாக இருந்து வந்தது. கனத்த இதயங்களுடன் 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நாங்கள் இலங்கையிலிருந்து வெளியேறினோம். எமது நண்பர்களையும், மருத்துவத் தொழிலையும், சொத்துக்களையும் இழந்தோம். ஆனால், எமது மிகப் பெரிய இழப்பு ரஜிகரனின் இழப்பாகும்.

### ஜெனீவாவில் பாரப்படுத்தப்பட்டது

ஒரு தந்தை என்ற முறையில் இது தொடர்பான உண்மையைத் தேடிக் கண்டுபிடிப்பது எனது கடமையாகும். 'திருகோணமலை ஐவர் சம்பவம்' என பரவலாக அறியப்பட்டிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்துவதற்கென முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் நியமனம் செய்யப்பட்டிருந்த ஒரு விசாரணைக் குழுவிடம் நான் காணொலி ஊடாக சாட்சியமளித்திருந்தேன். ஆனால், அது போன்ற முயற்சிகளினால் எத்தகைய பயன்களும் கிடைக்கவில்லை. இந்தக் கொலையில் பாதுகாப்புப் படையினரின் வகிபங்கை ஏற்றுக்கொள்ளும் விடயத்தில் அரசாங்கம் ஓர் அரசியல் விருப்பைக் கொண்டிருக்கவில்லை.

எனவே, இந்த நிலையை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாத கட்டத்தில், ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் உண்மைக்கான எனது தேடலை எடுத்துச் செல்ல வேண்டுமென முடிவு செய்தேன். இது தொடர்பாக உண்மையைக் கூறுமாறு இலங்கையை வலியுறுத்த வேண்டுமென ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் கேட்டுக் கொண்டேன்.

இலங்கை தொடர்பாக 2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் புலன் விசாரணை அறிக்கையில் திருகோணமலை ஐவர் சம்பவம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதாவது - தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் நிலையை எடுத்துக் காட்டும் ஒரு குறியீட்டுச் சம்பவமாக அல்லது சாதாரண மொழியில் கூறுவதாக இருந்தால் ஒரு குற்றச் செயலை மூடிமறைப்பதை எடுத்துக் காட்டிய ஒரு குறியீட்டுச் சம்பவமாக - அது உள்ளடக்கப்பட்டிருந்தது. 16 வருடங்கள் கடந்த நிலையிலும் இந்த வழக்கு இன்னமும் ஸ்தம்பித நிலையில் இருந்து வந்தது. திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் சுருக்க முறையற்ற விசாரணை வழக்காக அது எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் இது தொடர்பாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்த 13 விசேட அதிரடிப்படை வீரர்கள் குற்றச் சாட்டுக்க ளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வினைத்திறன் மிக்க விதத்தில் விசாரணை நடத்தும் விடயத்தில் அரசாங்கம் எவ்வாறு தோல்வியடைய முடியும்? இது மிகவும் பாரதூரமான ஒரு கொலைச் சம்பவமாகும். சவச்சாலையிலிருந்து மருத்துவர் வழங்கிய அறிக்கை உடல்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்த விடயத்தை ஏற்றுக்கொள்கின்றது. எம்மைப் போன்ற குடும்பங்களுக்கு பதில்களை வழங்க முடியாதிருந்தால், இலங்கையின் குற்றவியல் நீதித்துறை குறித்து நான் எத்தகைய நம்பிக்கையையும் வைக்க முடியாது.

ரஜிகர் கொல்லப்படுவதற்கு முன்னர் தனக்கு உதவி வேண்டுமென என்னிடம் அழுகுரல் எழுப்பியிருந்தான்.... இது தொடர்பாக நீதி வழங்கப்படும் பொழுது - எனது மகனுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான உண்மையை இறுதியில் இலங்கை கூறும் பொழுது - உதவிக்கான ரஜிகரின் கோரிக்கை இறுதியில் செவிமடுக்கப்பட்டுள்ளது என்பதனை எம்மால் கூற முடியும்.

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். செலவுகள் குறையும். யாரை நம்புவது என்கிற குழப்பம் தீரும். மகிழ்ச்சியான நாள். பயனுள்ள புதிய விஷயம் ஒன்றைக் கற்றுக் கொள்வீர்கள்.

**இடபம்:** உங்களின் கவரும் தன்மை அதிகரிக்கும். பேச்சில் கவனம் தேவை. சகபணியாளர்களின் கேலிப் பேச்சுகளைப் பொருட்படுத்த வேண்டாம். பணியிடத்தில் நற்பெயர் கிடைக்கும்.

**மிதுனம்:** சாத்தியம் இல்லாத விஷயத்தை [illegible] செய்து சாதனை படைப்பீர்கள். பணம் கொடுக்கல், வாங்கலில் பெரிய லாபம் காண முடியும். பொருள் சேர்க்கை ஏற்படும்.

**கடகம்:** நல்லவர்கள் சிலரால் குடும்பத்துக்கு நன்மை கிடைக்கும். முதலீடு இலாபம் தரும். சாப்பிடும் விஷயத்தில் கவனம் தேவை. நீண்ட நாளாக இருந்த பிரச்சினை தீரும். நிம்மதி கூடும்.

**சிம்மம்:** கடந்த நாள்களை விட வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் சென்று பலன் அடைவீர்கள். தெய்வீகப் பணிகளில் உங்களுக்கு நாட்டம் உண்டாகும்.

**கன்னி:** காலை நேரத்துக்கு பிறகு நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும். மனதில் கருணை உருவாகி நல்ல செயல்களை செய்வீர்கள். உடல் ஆரோக்கியத்தில் சிறு தொந்தரவு வந்து நீங்கும்.

**துலாம்:** நட்பு வட்டம் விரிவடையும். சேமிப்பில் ஆர்வம் கூடும். உறவினர் ஒருவரின் ஆலோசனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். நெருங்கிய சொந்தங்களால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணையுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். நண்பர்களை சந்திப்பீர்கள். பொதுப் பணியில் ஈடுபாடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் செல்ல ஏற்பாடாகும். சுபச்செலவு வரும்.

**தனுசு:** யாரிடமும் கடுமையான சொற்களைப் பயன்படுத்திவிட வேண்டாம். பணியிடத்தில் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொள்வீர்கள். புதிய முயற்சிக்கான பலன் நிதானமாகக் கிடைக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் வரவேற்கத்தக்க முன்னேற்றம் வரும். உறவினர், நண்பர்கள் மத்தியில் உங்களது கௌரவம் உயரும். புகழ் தரும் செயல்களைச் செய்ய முயலுங்கள். வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிலுமே அவசரம் காட்டாமல் பொறுமையாக இருக்கவும். சோம்பல் காரணமாக முடிக்க வேண்டிய பணியில் தாமதம் வேண்டாம். உங்களின் பெருமையை அறிந்து சிலர் உங்களை நாடி வருவர்.

**மீனம்:** பிறருக்கு உதவி செய்வதால் உற்சாகம் அதிகரிக்கும். உங்களின் வாழ்க்கை தரம் உயரும். நட்பில் புரிதல் அதிகமாகும். திட்டம் ஒன்று நிறைவேறி உங்களை மகிழ்விக்கும். சுபச் செலவு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு வணிகர்களுக்கு இலகு கடன் திட்டம்

கொழும்பு, ஜன.3
சிறு வணிக உரிமையாளர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக இலகு கடன் வழங்கும் நடைமுறையை இலகுபடுத்த அரசு தயாராகவுள்ளது என்று இராஜாங்க அமைச்சரான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
தனிநபர்கள் தொழில்முனைவோராக மாறுவதற்கு அமைச்சு உதவத் தயாராகவுள்ளது. எவரும் இலகுவாக தொழிற்கடனைப் பெறக்கூடிய வகையில், அரச வங்கிகளில் கடன்பெறும் நடைமுறைகள் இலகுபடுத்தப்படும்.
தற்போதைய அரசின் கொள்கைகளை நிறுவுவதற்கு ஆதரவளிப்பது அரச ஊழியர்களின் பொறுப்பு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-4-இ)

# ரயில் கடவைகளை உடன் அமைக்குக!

*சாவகச்சேரி பிரதேசசபையில் வலியுறுத்து*

கொடிகாமம், ஜன. 3
சாவகச்சேரி பிரதேசசபைக்கு உட்பட்ட பகுதிகளில், பாதுகாப்பான ரயில் கடவைகள் அமைக்க வேண்டும். விரும்பத்தகாத அசம்பாவிதங்கள் ஏற்பட முன்னர் இந்தக் கடவைகளை உரியவாறு அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் உபதவிசாளர் செ.மயூரன்.
கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
யாழ்.- கொழும்பு ரயில் பாதையில் யாழ் மாவட்டத்தில் அதிகமான தூரம் எமது சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்கள் பயன்படுத்தும் வீதிகளை ஊடறுத்து செல்கின்றது. ஆனால், பல இடங்களில் பாதுகாப்பான கடவைகள் இல்லை.
ரயில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அந்தக் கடவைகளை உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அவசரமாக, கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக தண்டவாளப் பகுதியைக் கடந்து ஏ-9 வீதியிலிருந்து தவசிகுளம், கிளாலி, கச்சாய், கெற்பேலி சென்றடையும் வீதியில் அமைந்துள்ள ரயில் கடவையை பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும். அந்தக் கடவைக்கு ஒரு காவலாளியையும் அமர்த்த வேண்டும்- என்றார்.
இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பது என்றும் சபையில் தீர்மானிக்கப்பட்டது. (ம-159)


## மரண அறிவித்தல்

மண்ணில் 03 . 04 . 1964



விண்ணில் 29 . 12 . 2021

### அமரர் ரட்ணம் ரூபதாஸ் (கனடா)

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ரட்ணம் ரூபதாஸ் கடந்த (29.12.2021) புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ரட்ணம் - பகவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை - தவமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியாவின் அன்புக் கணவரும், சமீரன், ராவிடன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சற்குணேஸ்வரி, காலஞ்சென்ற சரோஜினி தேவி மற்றும் சிவசோதிமலர், ஜெயராஜா (டென்மார்க்), கமலதாஸ், குமாரதாஸ் (பிரான்ஸ்), பாரதிதாசன், ஸ்ரீரங்கமலர், ஸ்ரீரங்கதாஸ் (கனடா), ரஞ்சிதமலர், ரட்ணமாலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரா, வதனா (கனடா), நிலா வண்ணன் (கனடா), லதா, ஜெயா (ஜேர்மனி) காலஞ்சென்ற அரியமுத்து, கனகரட்ணம், விக்னேஸ்வரன், தங்கராசா, மதிதாசன், குலமதி (டென்மார்க்), அருந்தவநாயகி, தவமலர் (பிரான்ஸ்), பிரேமலதா, மீரா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் இன்று (03.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு (கனடா நேரம்) நடைபெற்று பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

03, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
R. பாரதிதாசன் (சகோதரன்)
077 617 6500
R. கமலதாஸ் (சகோதரன்)

தொடர்புகளுக்கு:
சத்தியா (மனைவி - 141 683 00232)
ரவி (சகோதரன் - 164 798 91324)
நிலாவண்ணன் (மைத்துனர் - 164 477 605 331) (cs 41965) (2.6)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 04 . 1994



ஆண்டவன் பிடியில் 03 . 01 . 2016

### அமரர் தவராசா கபிஷாந்

அழகான உருவம் கொண்ட அன்பானவனே!...
ஆண்டுகள் ஆறு ஆகுதய்யா நீர் எம்மை விட்டு பிரிந்து.
ஆனால் எம் இதயமோ உன் நினைவை விட்டு அகலவில்லை
என்றும் உன் நினைவுகள் தொடரும்...

22 வருடங்கள் உம்முடன்
வாழ்ந்த நினைவுகளுடன் என்றென்றும்.

அரியாலை,
யாழ்ப்பாணம்.
076 971 5618

குடும்பத்தினர்.

(CS 41958) 1-6

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 . 11 . 1946



மறைவு 04 . 12 . 2021

கடந்த 04.12.2021 அன்று சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவர்

### அமரர் சோமநாதன் பாலசுப்பிரமணியம்

அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிரியையும் இன்று (03.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை-பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, கண்ணீர் அஞ்சலி, மலர்வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு: தற்போதைய கொரோனா சூழ்நிலை காரணமாக இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

விஜி அகம்
புலவனார் வீதி, கல்வியங்காடு.

குடும்பத்தினர்
077 793 5944

(cs:41957) (2:6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 11.06.1942
மறைவு 01.01.2022

### நாகலிங்கம் அம்பிகைபாகன்

**(இளைப்பாறிய நீதிமன்ற பணியாளர்)**

யாழ் அத்தியடியைப் பிறப்பிடமாகவும், இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகலிங்கம் அம்பிகைபாகன் நேற்றுமுன்தினம் (01.01.2022) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அன்பழகன் மற்றும் மதியழகன் (U.K), மதிவதனி (ஆசிரியர், யா/ பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வி) அமுதினி (ஆசிரியர், யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை), காலஞ்சென்ற சித்திரா மற்றும் ஜீவழகன் (U.K), சுதாஜினி (U.K), உஷாந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் காரைநகர்) ஆகியோரின் ஆருயிர் தந்தையும், திருமதி குமாரசாமி சந்தானலெட்சுமி, சிவபாலமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரசிதா (U.K), இராஜேஸ்வரன் (ஆசிரியர், யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்), சிவகுமார் (நன்னடத்தை உத்தியோகத்தர், நீதிமன்ற பிரிவு- பருத்தித்துறை), பவித்திரா (U.K), ஜெயதரன் (U.K), கந்தசாமி (காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கஜாந், அஸ்மிதா, கவிஷ்னா, டுஷானன், அக்ஷிகா, வருணிகா, ஆதிரன், ஆதித்தன், அகரன், நிர்ஷன், லோகித், சயானியா ஆகியோரின் பாசமிகு பேரனும், திருமதி செல்வரெத்தினம் அழகேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற தயாபரமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.01.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாயன்மார்கட்டு, நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 021 221 1171

(CS 9[illegible]20) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்க கல்வி ஆய்வரங்கு

கொழும்பு. ஜன.3

"தமிழ்மொழிக் கல்வி கற்றல் கற்பித்தலில் மாற்றங்களும் புதிய நோக்குகளும்" என்ற தலைப்பில் கொழும்பு தமிழ்ச் சங்கம் கல்வி ஆய்வரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஆய்வரங்கு எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணி முதல் சங்கத்தின் சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்பிள்ளை மற்றும் ஆரம்பக் கல்வித்துறை விரிவுரையாளர் திருமதி ஜெ.டிலானி, முன்பள்ளிக் கல்வி ஆசிரியர் திருமதி கௌசி பிரகலாதன், கொழும்பு தேசியக் கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி திருமதி வானதி காண்டீபன், கொழும்பு தெகிவளை தமிழ் மகாவித்தியாலய அதிபர் சோமசுந்தரம் முரளி ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

கொழும்பு, வெள்ளவத்தை- உருத்திரா மாவத்தை ஊடான சங்கம் மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களும், பெற்றோரும் அழைக்கப்படுகின்றனர் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(எ-இ)



எஸ்.ஐ.எம்.பதிப்பகமும், பூவரசி பதிப்பகமும் இணைந்த பதிப்பான தமிழினி ஜெயக்குமாரின் "மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமர், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

(எ-இ)


## வீடு வாடகைக்குண்டு

அரசடி வீதி, கந்தர் மடத்தில் சகல வசதிகளும் கொண்ட பகுதி அளவு வீடு வாடகைக்குண்டு.

**077 517 6158**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்நகரை அண்டிய பகுதியிலும் மற்றும் நல்லூர் பகுதியிலும் வீடு வாடகைக்கு தேவை.

**077 248 7316**

## வேலையாள்கள் தேவை

முன் அனுபவமுள்ள
Waiter, Housc Keeping, Delivery Boys ,Chef தேவை.

**021 222 0631, 076 222 0632**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. கனகரத்தினம் நாதன் (B.A)

(பிரதம பாதுகாப்பு அதிகாரி - யாழ். பல்கலைக்கழகம்)
யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் இரண்டாவது பிரதம பாதுகாப்பு அதிகாரியாக 03.01.2022 இல் இருந்து பதவியேற்கும்




திரு. கனகரத்தினம் நாதன் அவர்களை எமது சங்கம் பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றது. இவர் சிறந்த விளையாட்டு வீரரும். இலங்கை கிறிக்கற் மத்தியஸ்தர் சங்க தரம் - IV நடுவரும். சமூக சேவையாளருமாவார். இவரின் பணிக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல பரமேஸ்வர பெருமான் அருள்புரியவும் வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: அங்கத்தவர்கள்
பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் கூட்டுறவுச் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்

(cs.1283) (2.6)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம:

## யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகை தொழிலாளர் சங்கம் யாழ்ப்பாணம்

# பொதுக்கூட்டம்

இடம் : கன்னாதிட்டி விஸ்வேஸ்வரி மணிமண்டபம்
காலம் : 08.01.2022 பி.ப 1.30

யாழ். மாவட்டத்தில்
நகைத்தொழில் செய்யும் அனைத்து
**விஸ்வகுலத்தவர்களையும்**
வருகை தரும்படி
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகை தொழிலாளர் சங்கம்,
213/1, கஸ்தூரியார் வீதி,

ஜெ.மனோகர்
செயலாளர்
**077 222 8482**

02.01.2022 ஆம் திகதி வெளிவந்த மேற்படி விளம்பரம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தெளிவில்லாமையால் மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது.

(cr.36954) (2.6)

# எழுபதாவது அகவை தின வாழ்த்துக்கள்

Congratulations

கலாகீர்த்தி

## திருமதி சாந்தினி சிவநேசன்

(கொக்குவில் கலாபவனம் )




பரதத்துப் புகழை இந்த பாரினில் ஓங்கச் செய்யும்
கலைவல்லீர் காலமெல்லாம் கனிவுடன்
- வாழ்க நீடு !
தொல்புகழ்க் குடியில் தோன்றிப் புகழுறும்
- வாழ்வு கொண்டீர்
இன்னமும் இனிக்க வாழ்க !
- கலையினால் நிலைத்து வாழ்க!

வாழ்த்துவோர்:
**நர்த்தனஷேத்திரா கலைக்குடும்பம்**

Congratulations

(cs.41960) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 04 . 1928



மறைவு
30 . 12 . 2021

## திருமதி செல்வகுலசிங்கம் பரமேஸ்வரி

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வகுலசிங்கம் பரமேஸ்வரி கடந்த (30.12.2021) வியாழக்கிழமை கொழும்பில் தனது 93 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - பார்வதி தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற செல்வகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் விக்கினேஸ்வரன் (கனடா), மனோன்மணி - தேவராசா (கொழும்பு), ஜெகதீஸ்வரன் (இளைப்பாறிய கிராம அலுவலகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கெங்காதேவி, காலஞ்சென்ற தேவராசா, காலஞ்சென்ற பகவதி ஆகியோரின் அன்பு மாமியும், ஜமுனா - மனோகரன் (கனடா), ஜீவகன் - தேவதாக்ஷினி (லண்டன்), மகிந்தன் - ஜனந்தினி (பொறியியலாளர் - சிங்கப்பூர்), மகிழினி - மயூரன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், சாதனா (இலங்கை),றஞ்சனா - காண்டீபன் (லண்டன்), றாகவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், வைஷ்ணவி, தக்ஷ்ணவி, விஜயாலன், கேஷன், தனோஷன், பவேதன், மனஸ்வினீ ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் துன்னாலை இல்லத்தில் நடைபெற்று பூதடவுல் தகனக் கிரியைக்காக கியான் காடு மனாயத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
செ.ஜெகதீஸ்வரன் (மகன்)
077 875 7672, 077 4196 284

துன்னாலை

(cs.41962) (2.6)

# மரண அறிவித்தல்

மண்ணில்
19 . 07 . 1967



விண்ணில்
02 . 01 . 2022

## திரு. சுவாம்பிள்ளை தேவராசா

கிளிநொச்சி உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுவாம்பிள்ளை தேவராசா (மல்லாகம் சன்மார்க்க சனசமூக நிலையத் தலைவர், முன்னாள் L.I.C காப்புறுதி முகாமையாளர்) நேற்று (02.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் திரு.சுவாம்பிள்ளை காலஞ்சென்ற மேரி லூவிசா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிங்கராசா - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி ஜெனிஸ் மலசோதி (ஆசிரியர் - யா/ குளமங்கால் றோ.க.த.க.பா) அவர்களின் பாசமிகு கணவரும், ஜெலான், பர்வின் அபிசேக், பிரவின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சகாயராசா, பாக்கியராசா, யோகராசா, சிங்கராசா, விமலராசா (அமெரிக்கா), கமலராசா, காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருளப்பு, ஞானபிரகாசம், செல்வராசா, அமலசோதி, பாக்கியநாதன், இராசேந்திரம், துரைசிங்கம், பீற்றர் றெக்வூட் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(cs 41963) (3.6)

தகவல்: குடும்பத்தினர்
076 498 7601

# கருணாஞ்சலி

அன்னை மடியில்
06 . 01 . 1952



ஆண்டவன் அணைப்பில்
30 . 12 . 2021

## அருணாசலம் தம்பிப்பிள்ளை கருணாகரன்

காரைநகர் நெடுங்காட்டை பிறப்பிடமாகவும், பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்தவருமான அருணாசலம் தம்பிப்பிள்ளை கருணாகரன் பிரான்சில் 30.12.2021 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், காரை விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட வீரருமான கருணாகரன்(கரன்) அவர்களின் மறைவுச் செய்தி எமக்கு எல்லாம் பாரிய துயரினை தந்துள்ளது.

காரை விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட குழுவின் இடது கரை (Left extreme) வீரராக நீண்டகாலம் சிறப்புடன் திகழ்ந்தவர். தனது மனச்சாட்சிக்கு சரி எனப்படுவதில் உறுதியானவர். கழகத்தின் வெற்றிக்கும், மகிமைக்கும் பங்காற்றியவர்.

அன்னாரின் ஆத்மா தில்லைபுரத்தில் திருநடனம் செய்யும் தில்லை நடராஜர் திருப்பாதங்களில் இன்புற்று இருக்க பிரார்த்திக்கின்றோம்.

- ஓம் சாந்தி -

உறுப்பினர்கள்,
காரை விளையாட்டு கழகம், காரைநகர். (cs. 919) (2.6)

Members,
Karai Sports Union,
Karainagar.

# மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 07 . 1955



இறப்பு
02 . 01 . 2022

## திருமதி இரத்தினவதனா அருட்செல்வம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினவதனா அருட்செல்வம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று (02.01.2022) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் திரு. திருமதி வெற்றிவேலு - பாக்கியரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் - கனகம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், திரு. அருட்செல்வம் (ஓய்வுபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி அலுவலக உத்தியோகத்தர்), அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினமாலா, காலஞ்சென்ற இரத்தினராசா (பொறியியலாளர்), இரத்தினவேல் (யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம் மட்டுவில்), இரத்தினசிங்கம் (காணாமல் போனவர்), இவ்லின் இரத்தினலீலா (முன்னாள் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரி யர், கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், கருணாமூர்த்தி, பிரபதாரணி, சுபாங்கனி, ராஜ்குமார், காலஞ்சென்ற செல்வேந்திரம் மற்றும் தவராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மேரி காஞ்சனா, ஜெயரூபினி (பிரான்ஸ்), ஜெயனி (லண்டன்), காலஞ்சென்ற சஜதன் மற்றும் சர்மிலன் (கனடா) ஆகியோ ரின் அன்புப் பெரியம்மாவும், சுஜந்தன், மாதுரி, தெபோரா (கனடா), டானியல், ரூத், டினோஜன், இவாஞ்சலின் ஆகியோரின் அன்பு மூத்த மாமியும், ஜெசிக்கா, ஜெனிற்றா ஆகியோரின் அன்புப் பெரியம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.01.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நேரியதாது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரத்தின வாசம்
இலுப்பையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(cs.41961) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்.
021 227 1194
077 612 5983

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கழுத்தை...

இன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இந்த விடயங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது தொடர்பாகவும் இதில் கவனம் செலுத்தப்படும் என்று அரச உயர்மட்டத்தில் இருந்து அறிய முடிகின்றது.

அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை, மீளளிக்க வேண்டிய வெளிநாட்டுக் கடன் போன்றவற்றால் இலங்கை அரசாங்கம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், அவற்றின் தாக்கம் எதிர்வரும் வாரங்களில் மக்கள்மீது பிரதிபலிக்கும் என்று துறைசார்ந்த நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலைமை அரசாங்கத்துக்குள்ளும் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் டொலர் கையிருப்பில் இல்லை என்றால், டொலரை இல்லாமல் ஆக்கியவர்கள் அதற்கு பொறுப்புக் கூறவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருக்கிறார்.

பசளை கிடைக்காமல் செய்தால், பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என்பது கூறித் தெரியவேண்டிய விடயமல்ல என்று தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு வர்த்தக அமைச்சர், கமத்தொழில் அமைச்சர், உணவு அமைச்சர் ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், மருந்துப் பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி செய்வது தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், பொருள்களின் விலையேற்றம் தவிர்க்க முடியாதது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வெளிநாட்டு அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பான பிரச்சினை காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்வதிலும் சில பாதிப்புகள் ஏற்படலாம் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

ஆயினும், நாட்டில் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்படுவதை தடுக்க விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், எப்போதும் சுகாதார துறைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறையினருக்கு உத்தரவிட்டுள்ளார் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அதேநேரம், கடன் பத்திரங்களுக்கு பணத்தைச் செலுத்தும் போது, மருந்துகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று , மருந்து தயாரிப்பு, விநியோகம் மற்றும் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் வரையறுக்கப்பட்ட அரச மருந்துக் கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, பெற்றோல் மற்றும் டீசலை ஏற்றி வந்த இரண்டு கப்பல்கள் சில தினங்களாக ஏற்றி வந்த பொருள்களை இறக்காமல் கடலில் நங்கூரமிட்டுள்ளன என்று ஐக்கிய ஒருங்கிணைந்த தொழிற்சங்க சக்தியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

அவற்றுக்கு வழங்க வேண்டிய 52 மில்லியன் டொலர் செலுத்தப்படாமையே எரிபொருள் இறக்கப்படாமைக்குக் காரணம் என்றும், எரிபொருளை உடனடியாக இறக்கவில்லை என்றால் நாட்டில் எரிபொருளுக்கான பெரும் நெருக்கடி ஏற்படும் என்றும் ஆனந்த பாலித சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதேவேளை, இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டம் தீர்மானம் மிக்கதாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. கடந்த மாதம் 20 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோரை அமைச்சரவை கூட்டத் துக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், இந்த முடிவு நேற்று மாற்றப்பட்டுள்ளது என்றும், அவர்களுக்கான அழைப்பு பிற்போடப்பட்டுள்ளது என்றும் அறியமுடிந்தது. அதற்கான காரணம் தெரியவராதபோதும், அமைச்சர்கள் சிலரின் அதிருப்தி நிலைப்பாடே அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், இந்தியாவிடம் இருந்து இந்த மாதம் இலங்கை அரசாங்கம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெறுவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது என்று தெரியவருகின்றது. (எ-இ)

## கொரோனாவால்...

தொற்றால் ஒருவர் உயிரிழந்துள்ளார். 2022ஆம் ஆண்டு கொரோனாத் தொற்றால் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட முதலாவது உயிரிழப்பு இதுவாகும். மாந்தை மேற்கைச் சேர்ந்த 70 வயது முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் கடந்த 30 ஆம் திகதி மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். மன்னார் மாவட்டத்தில் இதுவரை கொரோனாத் தொற்றால் 35 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 3 ஆயிரத்து 183 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (எ-56)

## 31 நாளான...

ரிழந்துள்ளது.

திடீரென நேற்றுமாலை சோர்வாகக் காணப்பட்ட குழந்தை உடனடியாகவே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. அங்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி ஒரு மணி நேரத்தில் குழந்தை உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே இறப்புக்கான காரணம் தெரியவரும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## அரிசி, பருப்பு...

வருகின்றது. இது தொடர்பில் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பளை, இந்திராபுரத்தில் தற்காலிக வீடு அமைத்து தங்கியிருந்த ஒருவர், வயற்செய்கை காரணமாக முல்லைத்தீவு சென்று இரு நாள்கள் தங்கியிருந்துள்ளார்.

அவர் நேற்று வீடு திரும்பியிருந்த நிலையில், வீட்டின் ஜன்னல் உடைக்கப்பட்டு வீட்டிலிருந்த பொருள்கள் திருடப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. வீட்டைச் சல்லடையிட்டுத் தேடியுள்ள திருடர்கள் நகைகள், பணம் கிடைக்காத நிலையில் வீட்டில் இருந்த அரிசி, தேங்காய், பருப்பு முதலானவற்றைத் திருடிக்கொண்டு சென்றுள்ளனர். (எ-9)

## எட்ட நில்லுங்கள்...

தல் ஒன்றை விடுத்துள்ளனர்.

புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக ஒருவரை ஒருவர் தழுவிக் கொள்வதையும், கைலாகு கொடுப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதும் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் நாளாந்தம் இனங்காணப்பட்டு வரும் நிலையிலும், புதிய வைரஸ் திரிபான ஒமிக்ரோன் நாட்டில் இனங்காணப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் வலியுறுத்தியுள்ளனர்.

அலுவலகப் பணிக்காக செல்லும்போது வாழ்த்து தெரிவிக்கும் வகையில் தழுவிக் கொள்வது, கைகுலுக்குவது போன்றவை வைரஸ் மிகவும் வேகமாக பரவுதற்கு உதவும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

## விமான...

ளர் கே.ஆர். ஓல்கா தெரிவித்துள்ளார். கொழும்பு, ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

நாட்டின் தற்போதைய மண்ணெண்ணெய் தேவை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் ஊடாக பூர்த்தி செய்யப்படுகின்றது. எதிர்காலத்தில் அது சாத்தியப்படாது போனால், விமான எரிபொருளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விமான எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் இடையே பெரிய வித்தியாசம் இல்லை. நாட்டின் மண்ணெண்ணெய்த் தேவையை பூர்த்தி செய்ய அதைப் பயன்படுத்த முடியும். - என்றார்.

டொலர் பற்றாக்குறை காரணமாக கச்சா எண்ணெய் இறக்குமதி தடைப்பட்டுள்ளதை அடுத்து, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகள் கடந்த 30ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் நாட்டில் மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. (எ-இ)

## ரயில்...

நட்டத்தில் இயங்கி வருவதற்கும், நட்டத்தில் இயங்கும் நிறுவனமாக விமர்சிக்கப்படுவதற்கும் கட்டணங்கள் அதிகரிக்கப்படாததும் ஒரு காரணம் என ரயில்வே திணைக்களம் சுட்டிக்காட்டி யுள்ளது.

பஸ் கட்டண உயர்வால் ரயில்களை நோக்கிச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும், இந்தச் சந்தர்ப்பத்தில் ரயில் கட்டணத்தை பஸ் கட்டணத்துக்கு நிகராக உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## தமிழர்...

முறைப்படுத்தக் கோரி நாம் கடிதம் எழுதுவது எந்தளவு தூரம் ஏற்றுக்கொள்ளக் கூடியது?

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

2015ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த இந்தியப் பிரதமர், தன்னுடைய 13 வருட கால முதலமைச்சர் அனுபவத்தில் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு கூட்டு சமஷ்டி முறையே பொருத்தம் என்று இலங்கை நாடாளுமன்றத்தில் தெளிவாகக் கூறியிருந்தார்.

அவ்வாறு இருக்கையில் தற்போது 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்று அவருக்குக் கடிதம் எழுதுவது எந்தளவு தூரம் பொருத்தமானது?. யார் பெரியவர் என்ற ஏற்றத் தாழ்வுப் பிரச்சினை காரணமாகவே ஒரு தரப்பு அமெரிக்கா செல்ல, மற்றைய தரப்பு இப்படியான கூட்டங்களை நடத்துகின்றது.

முஸ்லிம்களின் அபிலாஷைகள் வித்தியாசமானவை. அதேபோல மலையகத்தமிழர்களது அபிலாஷைகளும் வித்தியாசமானவை. வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களது அரசியல் அபிலாஷைகள் வித்தியாசமானவை. அதைப் புரிந்து செயற்பட வேண்டும்.

ஒரு வாரத்துக்கு முன்னர் ஒரு வரைபு தயாரிக்கப்பட்டு இருக்கின்றது. அது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது. அந்த வரைபை ஏற்றுக் கொள்கிறோம். இரண்டாவது வரைபு ஒன்றும் உருவாக்கப்பட்டது. அந்த வரைபில் முதலாவதில் உள்ள பல விடயங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டு, வெறும் கண்துடைப்புக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று கோருவதாக அந்த வரைபு இருக்கின்றது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி உயர் மட்டக் குழு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை எட்டுவதற்கு சமஷ்டி முறைமையையே முன்வைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

நாங்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் எனக் கூறவில்லை. ஆனால் இந்தியப் பிரதமரிடம் தேர்தலை நடத்துங்கள் என்று கோருவதும் நியாயம் இல்லை. அவ்வாறு கோர வேண்டிய அவசியமும் இல்லை. இந்தியாவின் கொல்லைப் புறம் வரையில் இன்னுமோர் நாடு வந்த பின்பும் அயல் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப்போகின்றதா என்பதை இந்தியா தான் சிந்திக்க வேண்டும்- என்றார். (எ-20)

## உயர்வு...

றரை வருடங்கள் நாம் சேவையில் ஈடுபடவில்லை. அதனால் பெரும் பொருளாதார இழப்புகள் ஏற்பட்டன. தற்போதுகூட 50 வீதமான பாடசாலைகளே திறக்கப் பட்டுள்ளன. எனினும், நாம் நஷ்டத்தைத் தாங்கிக்கொண்டோம். அப்போது கட்டண அதிகரிப்புச்செய்யவில்லை. ஆனால் தற்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் எமக்கு மாற்று வழி இல்லை.

அதேநேரம், குறுகிய தூர சேவையை வழங்கும் சாரதிகள், 15 வீத அதிகரிப்பை செய்தால் போதும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம். - என்றார். (எ-44)

## வேகமெடுக்கும்...

என்று விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும், அநுராதபுரம் மாவட்டத்திலும் ஒமிக்ரோன் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் வைரஸ் திரிபு வேகமாகப் பரவும் என்பதையும், அதில் உள்ள ஆபத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ள விசேட மருத்துவ நிபுணர், சுகாதார நடைமுறைகளை மக்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிவான மரப்பெட்டியில் உடல்; சூழலைப் பாதிக்காதபடி தகனம்

## பேராயர் டுட்டுவின் ஆசைப்படி இறுதி நிகழ்வு



மரணச் சடங்கில் மிகவும் ஆடம்பரமாக விலையுயர்ந்த சவப்பேழை பயன்படுத்தப்படுவதையும் மலர்களையும் மலர்வளையங்களையும் கொண்டுவந்து உடல் மீது குவிப் பதையும் எளிமையை விரும்பிவந்த டெஸ்மன்ட் டுட்டு ஏற்றுக்கொண்டதில்லை. தனது இறுதி நிகழ்வு ஆடம்பரமும் ஆடம்பரச் செலவுகளும் இன்றி அடக்கமாக நடத்தப்படவேண்டும் என்பதை அவர் ஏற்கனவே தான்சார்ந்த நிறுவனங்களிடம் கூறியி ருந்தார். தனது வாழ்நாள் பூராகவும் இயற்கையை நேசித்துச் சுற்றுச்சூழ லின் காவலராக விளங்கிய அவரது இறுதிச் சடங்குகள் அவரது விருப்பப்படியே மிக எளிமையாக நடைபெற்று முடிந்துள்ளன.

டுட்டுவின் உடல் மிகவும் மலிவான ஓக் மரப்பேழை ஒன்றில் வைக்கப் பட்டது. அவரது விருப்பப்படி குடும்பத்த வர்கள் சார்பில் ஒரேயொரு சிறிய மலர்க்கொத்து மட்டுமே பேழை மீது வைக்கப்பட்டது. தண்ணீர் மற்றும் இரசாயனப் பொருள் கலந்த நீரில் உடலைக் கரைக்கின்ற புதிய நீராவித் தகனமுறையில் அவரது உடல் தகனம் செய்யப் பட்டதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது. தீமை நிறைந்த காபன் வெளியேற்றத்துக்குக் காரணமான வழமையான தகன முறைக்குப் பதிலாகச் சூழலைப் பாதிக்காத இந்த நவீனமுறை தற்சமயம்உலகில் அறிமுகமாகி வருகிறது. தனது உடல் அவ்வாறு தகனம் செய்யப்பட வேண்டும் என டுட்டு விரும்பியி ருந்தார் என்று கூறப்படுகிறது. கொரோனா பேரிடர் காரணமாக இறுதி நிகழ்வில் அவரது பழைய நண்பர்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தவர்கள் உட்பட சுமார் நூறுபேர் வரை மட்டுமே கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உலக அரசியல் மற்றும் ஆன்மிகத் தலைவர்கள் இறுதிச் சடங்கில் பங்குகொள்ள முடியாமற்போயிருக்கிறது. கடந்த ஞாயிறன்று 90ஆவது வயதில் காலமான டுட்டுவின் மறைவு தென் ஆபிரிக்காவில் பெரும் உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியிருந்தது. கேப் ரவுணில் உள்ள சென். ஜோர்ஜ் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு கடந்த சில தினங்களாக ஆயிரக்கணக்கான மக்கள் சமூக இடைவெளியுடன் வரிசைகளில் வந்து இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.



தென் ஆபிரிக்காவின் அதிபர் சிறில் ரமபோசா நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிச் சடங்கில் உரையாற்றிய போது 'எங்கள் நவீன தேசத்தின் ஆன்மீகத் தலைவர்' டுட்டு என்று அவரைப் புகழ்ந்தார். அங்கிலிக்கன் தேவாலயத்தில் அரசு முறைப்படி நடந்த உத்தியோகபூர்வ இறுதி நிகழ்வுகளின் பின்னர் உடல் நீராவித் தகனத்துக்காக எடுத்துச்செல்லப்பட்டது.

### நீராவித் தகனம் என்றால் என்ன?

நீராவித் தகனம் அல்லது திரவத் தகனம் என்று அழைக்கப்படுகின்ற நெருப்பு இல்லாத பிரேத தகன முறை தொழில்நுட்பப் பெயரில் அல்காலைன் ஹைட்ரோலிசிஸ் எனப்படுகிறது, அதில் முதலில் உடல் பொட்டாசியம் ஹைட்ரொக்சைட் கலந்த தண்ணீரில் 90 நிமிடங்கள் 300 பாகை செல்சியஸ் வெப்பத்தில் வைக்கப் படும். அது உடல் திசுக்கள் அனைத்தையும் கரைத்து, எலும்புகளைமாத்திரமே எச்சமாக விடுகின்றது. எலும்புகள் பின்னர் கிறிமுலேற்றர் என்னும் இயந்திரத்தில் சாம்பல் துகள்களாக அரைக்கப்படும். இறந்தவரது விருப்பப்படி அதனை, பின்னர் வழமையான முறையில் புதைக்கவோ அல்லது நீர் நிலைகளில் தூவவோ முடியும். சூழலுக்குத் தீங்கில்லாத இந்தப் புதிய தகனச்சடங்கு முறை சாதாரணமாகப் பிரேதங்களை எரியூட்டும் போது வெளியேறுகின்ற காபனின் அளவை 90 வீதம் குறைக்கின்றது என்பதைத் தொழில்நுட்பவியலாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

நன்றி:
குமாரதாஸன் ,
பரிஸ்

**வேலையாள் தேவை**

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் வீட்டு வேலைக்கு வயதான பெண் ஒருவர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(cs 1130) (2.6)

**076 965 4217**

**காணி விற்பனைக்கு**

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரம்.
நஞ்சுதின்னி பகுதியில் 18 நிலப்பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
(நன்னீர் கிணற்றுடன்)
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(cs 41984) (2.6)

**076 491 7841, 077 790 6097**

**காணி விற்பனைக்கு**

ஸ்ரான்லி வீதியை முகப்பாகக்கொண்டதும் அம்பலவாணர் வீதியில் அமைந்துள்ள 1 ¾ பரப்பு மற்றும் 1 ¼ பரப்பு விஸ்தீரணமான காணிகள் விற்பனைக்குண்டு. (cs. 918) (2.6)

**077 759 2935, 071 856 5437**

**பராமரிப்பு உதவியாளர் தேவை**

எமது ஆலயத்திற்கு நிர்வாக முகாமைத்துவத்திற்கு உதவியாளராக க.பொ.த (சாதாரண தரம்) தகைமை உள்ள சைவ ஆசார சீலரான ஒருவர் உடனடியாக தேவை.
(மேலதிக விபரங்கள் நேரில்)
தொடர்புகளுக்கு:
திரு.செ. செல்வரட்ணம் - 076 622 1193
திரு.கு. மயூரன் - 077 535 9103
நிர்வாக சபையினர்
தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி
சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம், தலையாழி கொக்குவில்.
(cs.41964) (2.6)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



கடந்த 05.12.2021 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
**அமரர் நல்லையா கணேசானந்தன்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை (04.01.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரை இழந்து தவித்த வேளையில் எமக்கு ஆறுதல் அளித்தவர் களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிசெய்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.
(cs.1272) (2.6)
குடும்பத்தினர்

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
**A/L தொழில்நுட்பப்பிரிவு**
இறுதிச் செயலமர்வு - 2021
(Techno World இனால் நடத்தப்படும்
மாபொரும் இறுதிக் கருத்தரங்கு
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
**06,07, 08, 09 and, 10 JANUARY 2022**
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
ஆசிரியர்கள்:
• ராகவன் (B.Sc) • நிறோஜன் (B.Sc)
• முருகநிறோயன் (B.Sc) • உமாகாந்தன் (BIT)
"காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை"
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்
இடம் - வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346
(cr.36938) (2.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.